



# ஞானச்சுடர்

## சித்திரை மலர் 2005

ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


உ

## குறள் வழி

*அவா இல்லார்க் கில்லாகுந் துன்பம்ஃ துண்டேல்*
*தவா அது மேன்மேல் வரும்*



**பொருள்-** ஆசையில்லாதவர்களுக்கு துன்பம் வராது; அது இருந்தால் துன்பம் மேலும் மேலும் முடிவில்லாமல் வரும். (368)




## நற்சிந்தனை

### குதம்பாய்-5

நமனு மணுகுவனோ நாதனை நாம்பணிந்தால்
சமனாக நின்றிடடி - குதம்பாய்
சமனாக நின்றிடடி

விடத்தை மிடற்றில்வைத்த விமலன ருளைப்பெற்றால்
சடத்தின்மேல் ஆசையுண்டோ - குதம்பாய்
சடத்தின்மேல் ஆசையுண்டோ

இணக்கமா யிருந்துபார்த்தால் எல்லாம் சிவன்செயலாம்
பிணக்கைநீ விட்டிடடி - குதம்பாய்
பிணக்கைநீ விட்டிடடி.


ஞானச்சுடர்
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 88

2005 சித்திரை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| மலைமகள் மதலை.... | சிவ சண்முகவடிவேல் | 1 - 4 |
| சரணாகத ரட்சகன் | பா. சிவனேஸ்வரி | 5 - 8 |
| சித்தர்களின் சமய...... | இ சாந்தகுமார் | 9 -11 |
| நாவலர் பெருமான்.... | ச. விசி | 12 -14 |
| ஆசை ⇨ அலைச்சல்..... | சு. இலங்கநாயகம் | 15 - 18 |
| சைவ சித்தாந்தம்.... | கு. சிவபாலராஜா | 19 - 22 |
| அன்னம் அளிக்கும்... | சி. நந்தகுமார் | 23 - 24 |
| அருணகிரி சுவாமிகள் அருளிய... | சி. வேலாயுதம் | 25 - 26 |
| தூய்மையான வாழ்வுக்கு... | காரை எம்.பி. அருளானந்தன் | 27 -29 |
| வந்திப்பார் மதுரக்கனி | முருகவே பரமநாதன் | 30 - 32 |
| ஆட்கொண்ட போது | சி. யோகேஸ்வரி | 33 - 34 |
| யார் இந்த (ச்) செல்லம்மா? | சச்சிதானந்தா ஆச்சிரமம் | 35 - 37 |
| நித்திய அன்னப்பணி.. | | 38 - 39 |
| மானுடத்தை மேன்மைப்.... | வ. குமாரசாமி ஐயர் | 40 - 42 |
| செய்திக்கொத்து | | 43 - 44 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 45 - 48 |


**அன்பளிப்பு:-**

மலர் ஒன்று 30/= ரூபா
வருடச்சந்தா தபால்ச்செலவுடன் 385/=
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை
தொலைபேசி இலக்கம்:- *021-2263406*

**அச்சுப்பதிப்பு:-** *சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு*

## ஞானச்சுடர்
# பங்குனிமாத வெளியீடு

*வெளியீட்டுரை :-*

பங்குனிமாத வெளியீடு 24- 03- 2005 இடம்பெற்றது. வெளியீட்டுரையை ஆசிரியர் பரமேஸ்வரன் அவர்கள் மேற்கொண்டார்கள். சாதாரணமாக ஒரு நூலை வெளியிடுவதற்கு பல மாதங்கள் எடுப்பதை நடைமுறையில் நாம் காணுகின்றோம். அத்துடன் அந்த வெளியீடு தொடர்பாக பலருடைய உழைப்பும் அர்ப்பணிப்பும் அவசியமாகிறது. ஆனால் இங்கே சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் வெளியிடப்படும் ஞானச்சுடர் மாதாமாதம் குறிப்பிட்டகால ஒழுங்கில் காத்திரமான கட்டுரைகளைத் தாங்கி சிறப்பாக தொடர்ச்சியாக வெளிவருவது அதிசயமான ஒரு விடயம் என்பதை வெளிப்படுத்தினார்கள்.

*மதிப்பீட்டுரை :-*

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கள் நூலிற்கு மதிப்புரை வழங்கினார்கள். ஞானச்சுடர் சஞ்சிகை ஏழாவது ஆண்டைக் கடந்து எட்டாவது ஆண்டில் காலடிவைத்துளது. இக்காலத்தில் இது பல எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது என்பதையும் நாம் சிந்திக்க வேண்டுமென்பதை எடுத்துக் கூறினார்கள். அத்துடன் ஞானச்சுடரில் வெளிவந்த தொடர் கட்டுரைகள் நூல் வடிவம் பெற்றிருப்பதையும் சுட்டிக்காட்டினார்கள். ஞானச்சுடர் சமயத்தினை மட்டுமன்றி பண்பாட்டினையும் வளர்த்துவரும் வகையில் கட்டுரைகள் இடம்பெற்றிருப்பதையும் தெரியப்படுத்தினார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக சந்நிதியானுடைய திருநீற்றை மலர் தாங்கி வருவதனால் எல்லோருடைய கவனத்தையும் ஆன்மீக ரீதியில் திசைதிருப்புகின்ற செயற்பாட்டையும் செய்துவருவதையும் அடியவர்களுக்கு எடுத்துக்காட்டினார்கள்.

ஞானச்சுடரின் அட்டைப்படம் தொடக்கம் அதில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கட்டுரைகளுக்கும் தனது மதிப்புரைகளை திரு சிவ மகாலிங்கம் அவர்கள் வழங்கினார்கள். அதேநேரம் ஆழமான சமயக் கருத்துக்களையும் மதிப்புரைகளின் நடுவே வெளிப்படுத்தினார்கள்.

# சுடர் தரும் தகவல்

இன, மொழி, மதரீதியான வேறுபாடுகள் ஆரம்பகாலம் தொடக்கம் இருந்து வந்துள்ளன. இன்று உலகமயமாதல் சர்வதேச ரீதியான தொழிலாளர் நகர்வு மற்றும் யுத்தம், இயற்கை அழிவுகள் போன்ற பல்வேறு காரணங்களால் மக்கள் ஒரு நாட்டுக்குள்ளும் சர்வதேசரீதியாகவும் இடம்பெயர்ந்துவாழும் நிலைமைகள் ஏற்படுகின்றன. இதனால் பொருளாதாரரீதியாக ஏற்படுகின்ற தாக்கங்கள் சாதகமாகவோ பாதகமாகவோ அமையலாம். ஆனால் சமூகரீதியாக கலாச்சார ரீதியாக வேறுபட்ட பல தன்மைகளுக்கு முகம்கொடுக்கவேண்டியநிலை அனைவருக்கும் ஏற்படுகின்றது. அதாவது பல்லினச்சமூகங்கள் மத்தியில் மனிதன் வாழவேண்டிய ஒருநிலை இன்று ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு இன, மத, மொழிரீதியாக பல்லினச்சமூகங்கள் மத்தியில் மனிதன் வாழவேண்டிய நிலை ஏற்படும்பொழுது மனிதன் இவற்றிற்கு முகம்கொடுத்து வாழவேண்டியது ஒரு பிரச்சினையாக இன்று மாறிவருகின்றது. இந்த வாழ்க்கை இன்று மனிதனுக்கு தவிர்க்க முடியாததாகவும் மாறிவருகின்றது.

இங்கே ஒவ்வொரு வகையான பண்பாடுகளைக் கடைப்பிடிக்கின்றவர்கள் தங்களது பண்பாடுகளின் தனித்துவத்தை இழந்துபோக முடியாத அதேநேரம் மற்றவர்களது பண்பாடுகளை முழுமையாக நிராகரித்து வாழ முடியாத நிலமையும் ஏற்படுகின்றது.

இங்கே இந்தப்பிரச்சினையை கல்வி எவ்வாறு அணுகுவது என்ற பிரச்சினையும் ஏற்படுகிறது. ஒவ்வொரு பண்பாட்டு மக்களதும் தனித்துவங்களை பேணிப்பாதுகாத்து வளர்த்து அவற்றின் சிறப்பு இயல்புகளை வளர்க்கவேண்டிய தேவையும் கல்விக்கு இருக்கிறது. அதேநேரம் ஏனைய பண்பாடுகளையும் உள்வாங்கி ஏனையவர்களது பண்பாட்டுக்கும் மதிப்புக்கொடுத்து எல்லோரும் மனிதர்கள் என்ற வகையில் உலகமனிதனாக அவனை மாற்றிக்கொள்ள வேண்டிய வகையில் கல்வி செயற்படுவதா என்ற கேள்வி ஏற்படுகிறது. இதற்கு மிகவும் திருப்தியான முறையில் கல்வியியலாளர்களால் தீர்வு காணமுடியுமா என்பது சிந்திக்கவேண்டிய விடயமாக உள்ளது.

இவ்வாறு பல்லினச் சமுதாயத்தினர் மத்தியில் வாழுகின்ற இளம் சமுதாயத்தினர் இவற்றிற்கு சரியாக முகம்கொடுக்க முடியாது தமது தனித்துவமான விழுமியங்களை இழக்கின்ற அதேநேரம் மனித வாழ்விற்கு ஒவ்வாத பல பண்பாடுகளுக்கு ஆட்பட்டு மனித விழுமியங்களை இழந்து வருவது ஒரு பிரச்சினையாக உலகம் முழுவதும் வலுப்பெற்று வருகிறது. இதனால் விழுமியக்கல்வியை எல்லாநாடுகளிலும் ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுவருகிறது. அதுமட்டுமன்றி வேற்றுமையில் ஒற்றுமையாக மனிதன் வாழக் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

# சந்நிதி நிகரில் வேலவனே

கார்த்தி கேயனே, கந்தனே, குகனே,
கீர்த்திசேர் செல்வச் சந்நிதி முருகனே,
சீர்த்தியும் செல்வமும் சிறப்பும் பெற்றிடக்
கூர்த்தமெய்ஞ் ஞானக் குன்றெனத் தமிழர்
நேர்த்தியா யிலங்கையில் நிமிர்ந்து நின்றிட
ஆர்த்திடும் வீரமோர் அங்கமாய்த் திகழத்
தீர்ந்த சமாதானம் செப்பமாய் ஓங்கிட
பார்த்திப ஆண்டின் பயனா யருள்வாயே.

வீரக் குமரனே, விண்ணவர் நாதனே,
சேரும் சிவசத்தி திருமா மகனே
சீரிய தேவரைத் சிறையொடு வருந்திய
பாரிய சூரனை வேருடன் களைந்தோய்
வாரிசா யமைந்த, எம் மூரையும் சினத்தையும்
நேரிய மொழியையும் நிலைபெறத் தாவென
யாரிடஞ் சொல்வோம் நீயிங் கிருக்கச்
சீருடைச் சந்நிதிச் சிறந்தவே லவனே.

குன்றக் குறிஞ்சிக் குமரன் விளையாட
அன்றுசிவ சத்தியால் அருளிய நல்லவேல்
வன்திறல் சூரனை வாட்டி வலியழித்து
வென்றே யமரர்சிறை மீட்டிய விறல்வேல்
நன்றே கதிர்காமர் நாடக் கதிரமலையில்
ஒன்றாகக் கையீந்த உத்தம வடிவேல்
இன்றே சந்நிதி எழுஞானச் சுடராய்
நின்றதை மறவோம் நிகரில்வே லோனே.

முதுபெரும் புலவர்,
கலாபூஷணம் ஆசிரியர்,
*வை. க. சிற்றம்பலம்.*

உ

# சித்திரை மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திரு A. ரவிகாந்**
(ஜேர்மனி)

**திரு கெங்காசுதன்**
(அவுஸ்திரேலியா)

**திருமதி K. கந்தசாமி**
(லண்டன்)

**டாக்டர் S. யோகேந்திரன்**
(பொறுப்பதிகாரி, மத்திய மருந்தகம் தம்பிலுவில்)

**திருமதி நல்லம்மா கிருஷ்ணபிள்ளை**
(இடைக்காடு)

**தலைவர்**
(சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்)

**திரு நா. குகன்**
(குகன் ஸ்டுடியோ பருத்தித்துறை)

**திரு சோ. பாலேந்திரன்**
(பாலன் விற்பனை நிலையம், பருத்தித்துறை)

**திரு இ. மனோகரன்**
(மனோ லைற், கோப்பாய்)

**திரு தா. முத்துவேலு**
(சந்நிதி வீதி, உடுப்பிட்டி)

**திரு க. அருள்ஐயா**
(ஆனைக்கோட்டை)

**திரு S. சந்திரகுலம்**
(துஷி மினி சினிமா,ஆவரங்கால்)

**திரு அ. தவராசசிங்கம்**
(களஞ்சியப் பொறுப்பாளர் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்)

**திரு சி. விபுலானந்த அடிகள்**
(லிகிதர் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்)

**திரு கு. மாணிக்கராசா**
(கிளை முகாமையாளர் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்)

**திரு ந. ஜெயக்குமார்**
(விற்பனையாளர் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்)

**திரு ச. மகாதேவன்**
(ஜெயந்தி என்ரபிறைஸ் ஆவரங்கால்)

**திரு சி. நந்தகுமார்**
(வங்கி ஊழியர் உரும்பராய்)

**உரிமையாளர்**
(உமாபதி தொலைத்தொடர்பகம் உரும்பராய்)

**திரு R. ஸ்ரீஸ்கந்தராம்**
(தபாலதிபர் புன்னாலைக்கட்டுவன்)

**திரு கு. லோகேந்திரன்**
(மில் ஒழுங்கை, மல்லாகம்)

**திரு இ. அருந்தவராசா**
(விற்பனையாளர் வாசிகசாலையடி உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்)

**திரு வீ. கிருஸ்ணராசா**
(ஆசிரியர் மானிப்பாய் இந்துக்கல்லூரி)

**திரு க. பாலசுப்பிரமணியம்**
(பதிவாளர் இமையாணன்)

**திருமதி சிவராஜா**
(நல்நடத்தை உத்தியோகத்தர் கல்வியங்காடு)

**திரு இராசையா சற்குணதாஸ்**
(ஊரெழு கிழக்கு சுண்ணாகம்)

**திரு N. ஜெயா**
(பஞ்சுகடை சிவன் வீதி உரும்பராய்)

**திரு சி. நடேசமூர்த்தி J. P**
(ஆஸ்பத்திரி வீதி அச்சுவேலி)

**தலைவர் / செயலாளர்**
(மாணிக்க இடைக்காடர் ச. ச. நிலையம்)

ஓம்

# மலைமகள் மதலை மகேந்திரம் செல்லக் காரணம்

*திரு சிவ. சண்முகவடிவேல் அவர்கள்*

**பொ**ன் என்னும் பெயரினான் கந்தவேட் பெம்மானுக்கு அவுணரைப் பற்றி ஆதியோடு அந்தம் வரை எடுத்து அறைந்தார். சமரசூர பன்மாவைத் தடிந்த குமரன் இன்னருள் புரிந்தார். ஐயன் ஆணைப்படி அமர குரு ஆசனத்து அமர்ந்தார். பின்னர் அயில்வேல் அண்ணல் அயலில் நிற்கும் அமரர் கோவை அன்போடு பார்த்தார். அருள் வரப் பின்வருமாறு அருளுவார்.

''இந்திரனே! இதனைக் கேட்பாய், உன் மனத்தில் ஏதும் எண்ணாதே. கோபம் மூண்ட சூரர் குலத்தை முடிப்போம். வானுளோர் சிறையினை மீட்போம். தேவ உலகத்தை நீ ஆள வைப்போம். ஐயப்படாதே--" என்றனர் மலைமகள் மதலை.

இதனை இம்மை, மறுமைப் பயனைப் பரிவோடு ஈயும் பரமசிவன் மைந்தர் பகர்ந்தார். அது கேட்டு மகபதி மனம் மகிழ்ந்தான். வள்ளலை வணங்கினான். புலவர் தொகையோடும் போற்றினான். ஆற்றாத துன்பெலாம் அகன்றான். இந்திரன் இன்பத்தோடு இனிதிருந்தான்.

அப்போது செந்தில்மா நகரம் தன்னில் சிம்மாசனத்தில் விளங்கும் கந்தவேட்பெருமான் கருணையினாற்



கருதுகின்றார். எம்பிரானுக்குப் பிரமதேவர் முதலான தேவர்களும் முனிவர்களும் பிள்ளைகள். அதே போல அவுணர் கூட்டத்தவரும் குழந்தைகள். இருப்பினும், தரும நெறி நில்லாதவரைத் தண்டிப்பது அறநூல் இயற்கையாகும். அஃது சொல்லுதற்கரிய அறனுமாகும். இருப்பினும்--

"சூரன் எண்ணற்ற திருவில் விளங்குகின்றான். அவன் சுற்றத்தவர் குற்ற மற்ற சிறப்புடன் திகழுகின்றனர். அவர்களை அழிப்பது நீதியாகாது. தேவர்களைச் சிறையினின்று விடு

வித்து உய்யும்படி சூரனுக்கு ஒரு தூதினை விரைவில் விடுப்போம்.

''ஒற்றன் உரைக்கும் மாற்றத்தை ஒருவனாம் சூரன் கேட்டுத் தேவரைச் சிறை விடுவித்தால் சூரனும் சுற்றமும் இன்னும் நீண்ட காலம் வாழட்டும். தூதுரையை மறுத்தானேல் ஆண்டு சென்று அவனை அடுதும் என்று அயில்வேல் அண்ணல் அகத்தில் ஆலோசித்தார்.

பிரமபுரத்துறை பெம்மான் பெற்று உகந்த கந்தன் நாராயணன், நான்முகன், நாகர்கோன் முதல் நாகர்களை நன்குற நாடினார்.

"அவுணர் கூட்டத்தை அழிக்க நாளை நடப்போம். அதற்கு முன்னம் ஒரு தூதனைத் தூண்டுவோம். வெய்யசூரன் கருத்தை நாம் அறிதல் வேண்டும்." என்று அறைந்தார்.

அதனைக் கேட்ட அமரர்கள் எல்லாம் ஆறுமுகப் பெருமானுடைய ஆலோசனையைப் பெரிதும் ஆதரித்தார்கள்.

"எந்தை பெரும் போர் ஆற்ற ஏகுவதற்கு முன்னர் ஓர் தூதுவனை விடுப்பது அறத்தாறாகும்." என்றார்கள்.

''சூரபன்மனிடம் வீரமா மகேந்திரத்திற்கு யாரைத் தூதாக விடுப்போம். செப்புதிர்'' என்றார் நங்கடம்பன். பிரமதேவர் வீரவாகு தேவருடைய பெயரினை எடுத்து விளம்பினார்.

"வீரமகேந்திரத்திற்கு வாயு தேவன் மெல்லெனத் தென்றற் காற்றாகவும் செல்லலரிது. எனக்கும் அவ்வாறே செல்லலரிது. செய்பணி தவறாது ஒல்லையில் மகேந்திரம் சென்று வல்விரைந்து வரவல்லவர். வீரவாகுவேயாம்" என்றார்.

சமர சூரபன்மாவைத் தடிந்த வேற்குமரன் அது தக்கதே என்றருளி னார். முதிர் தரும் உவகையோடு வீரவாகுதேவருடைய முகத்தைப் பார்த்தார். மொழியலுற்றார்.

"வீரவாகுவே! நீ மகேந்திரபுரம் செல். இந்திர ஞாலத்தேரோனைக் காண்பாய்! அவனிடத்தில்,'' சயந்தனை, தேவர்களோடும் சிறைவிடச் சொல். தருமத்தின் வழி சார்ந்து வளத்தோடும் நீடுழி வாழட்டும்.

''சூரன் அம்மொழி மறுத்தானேல் அவுணர் கூட்டத்தை இம்மென முடிப்போம். நின்னை வேற்படைக்கு உண்டியாகக் கொடுப் போம். தெம்முனையோடு நாளை செருச் செய்யச் செல்வோம். இம் மொழி மெய்ம்மையதாகும் என விளம்புதி."

அவ்வார்த்தையை ஏற்று வீரவாகு விளம்புவார்; "கருணைக் கடலே! குருவாய் அருளும் குகனே!! வீரமா மகேந்திரம் விரைந்து செல்வேன். சுந்தரத் திருவில் வைகும் சூரபன்மா முன் செல்வேன். எந்தை இயம்பியவற்றை அவனுக்கு எடுத்துரைப்பேன். சூரனுடைய உள்ளக்கிடக்கையை ஓர்ந்து வந்திடுகின்றேன் என்றார் வீரவாகு. வள்ளல் பிரானை வணங்கினான். அருள் விடைபெற்றுச் சென்றார்.

வீரவாகு கந்தமாதனம் சென்றார். கடலைக் கடந்தார்.

வீரசிங்கனை வெற்றி கொண்டார். இலங்கை கடலுள் வீழ்ந்தது. அதிவீரனை அழித்தார். மகேந்திர நகர் விரைந்தார். காவலாளி கஜமுகனைக் கொன்றார். நகருள்ளே புகுந்தார். சிறைக்களத்தில் சயந்தன் புலம்பினான். சயந்தன் கனவு கண்டான். வீரவாகு சயந்தனுடைய சஞ்சலத்தைத் தேற்றினார். அவையினுள்ளே புகுந்தார். அத்தாணி மண்டபத்தில் சூரபன்மாவிடத்தில் முருகப் பெருமானுடைய கருணை மொழியைக் கழறினார். இடித்துரைத்தார் பாவி அதனைப் பயனுள்ளதாக ஏற்கவில்லை.

வீரவாகு சயமுகனைச் சாடினார். காவலாளரைப் பிளந்தார். நகரத்தை அழித்தார். சகத்திர வாகுகளைச் சங்காரம் பண்ணினார். வச்சிரவாகுவை வதைத்தார். யாளி முகனைப் பூதூளி ஆக்கினார். வீரவாகு மீண்டும் செந்திலுக்கு மீண்டு வந்தார்.

வீரவாகு காலையில் கந்தனைத் தொழுது மகேந்திரம் சென்றார். அன்று மாலைக் காலத்திலேயே கந்தன் கழலடி கண்டு தொழக் காதலோடு மீண்டு திரும்பினார்.

இந்திரத் திரு இலங்கையை வீரவாகு இகந்தார். அந்திரைக் கடல் அழுவம் அகன்றார். கந்தமாதனங் கவின்ற கடற்கரை கண்டார். செந்தில் மாநகர் சென்று சேர்ந்தார்.

வீரவாகு விமலனாகியே வீற்றிருந்திடும் குமரநாயகன் கோயில் குறுகினார்.

நாராயணன், வானுளோர், பிரமதேவர், முனிவர்கள், மகபதி மற்றுளோர் பாங்குறக் குழுமிக் கூடியிருந்தார்கள். அண்டர் நாயகன் அமருந் தன்மையைக் கண்டனன். முந்து கண்களால் முகந்து கொண்டனன். களிப்பில் மூழ்கினான்.

வீரவாகுவுடைய உள்ளம் உருகியது. என்பு இளகியது. தூய கண்ணீர் வெள்ளம் பெருகியது. மயிர்க் கால்கள் குச்செறிந்தன. உடலம் புளகாங்கிதம் கொண்டது. வீரவாகு சமர சூரபன்மாவைத் தடியும் குமரவேளைக் கும்பிட்டார்.

வீரவாகு, உறுநர்த் தாங்கிய மதனுடைநோன்தாளை, செம்மலுள்ளம் படரும் சேவடியை மும்முறை வணங்கினார். மகிழ்ச்சி அன்பு இரண்டும் இகழ்ச்சி இன்றித் திகழ்ச்சியோடு திகழ்ந்தன. அஞ்சலி செய்து, ஆராதனை செய்து, ஆதரித்து ஏத்தினார். எங்கும் மௌனம் நிலவ வீரவாகு மோனத்தோடு நின்றார்.

அப்போது குணங்கள் மேம்படும் குமரன் கூறுவான்;

“இளையோய்! நீ தேவரை வருந்துஞ் சூரன் முன்பு சென்றதும், நம்மொழி விளம்பியதும், சூரன் உரை செய்திட்டதும் நீ விரைவின் மீண்டதும் ஆரிய யாவற்றையும் ஒழுங்காக உரைப்பாய்” என்றார்.

‘‘விமல நுங்கள் வார்த்தையைச் சூரன் முன்பு போய் முறைப்பட மொழிந்தேன். அவன் கெடலரும் சுரர் வெஞ்சிறை விடுகிலேன் என வெகுண்டு

விளம்பினான்." என்று வீராதி வீரர் விளம்பினார்.

மாயச்சூரன்று அறுத்த மைந்தன் மொழிகுவான்;

"தேவரைச் செய்யும் சிறை விடு. நீ நன்கு நீண்டகாலம் வாழலாம்." என்று தூதுவிடுத்துச் சொல்லு வித்தனம். பாவி அன்னது பயன் என்று பற்றவில்லை.

"அழிவதே அவன் விதிய தாதலின் தீதில்லாத விண்ணவர் சிறை விடோம் என ஓதினான். அவன் மேன்மையை நீக்க நாளை நாம் நடப்போம்" என நவின்றார். அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர் மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத் தெய்யா நல்லிசைச் செவ்வேள் சேஎய்-

ஆறுமுகப் பிரான் கொடிய சூரன் மீது செல்லுதும் என்ற சொல் நந்துயர் மாற்றியது என நான்முகன், நாராயணன், முதல் தேவர்கள் நன் மகிழ்வு எய்தினர்.

## வாசகர் உள்ளத்திலிருந்து

சென்ற மாதம் செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு வந்து, தங்கள் ஆச்சிரமத்திற்கும் வந்து ஞானச்சுடர் தை, மாசி மாதச் சுடர்கள் நேரிலும், இவ்வாரம் ஞானச்சுடர் பங்குனி மாதச்சுடர் தபாலிலும் பெற்றேன்.

மூன்று சுடர்களையும் படித்து ரசித்தேன். தங்களுக்கு எப்படி நன்றி கூறுவதென்றே தெரியவில்லை. முக்கனிகளையும் சாப்பிட்டுச் சுவைத்த மகிழ்ச்சியைப் பெற்றேன்.

இந்தியாவிலிருந்து வரும் ஞானபூமி சக்தி விகடன், குமுதம், சக்தி ஸ்பெஷல், ஆன்மீகம், கோபுரம், ஸ்ரீ கிருஷ்ணவிஜயம், ஸ்ரீ இராமகிருஷ்ணவிஜயம் போன்ற ஆன்மீக சஞ்சிகைகளையும் பெற்று வாசிப்பதுண்டு. அவற்றிற்கு எதுவிதத்திலும் சளைக்காமல் தங்கள் ஞானச்சுடரும் பல அம்சங்களிலும் சிறந்து விளங்குவது கண்டு மிகப் பேரானந்தம் அடைந்தேன்.

சி. பரஞ்சோதி
அரச ஓய்வூதியர்

மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படுமுன் உன்னைப்பற்றிக் கவலைப்படு.

உ

# சரணாகத ரட்சகன்

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

சர்வ வல்லமைபடைத்தவர் இறைவன். மனிதனுக்குத் தெரிந்த வார்த்தைகளால் அவரின் அருமை, பெருமை, வேடிக்கை, விளையாட்டு மகிமை, லீலை இவைகளை வர்ணிக்க முடியாது. இறைவன் ஒருவரேயானாலும் சொருபங்கள் பல வற்றை ஏற்று அவரால் தோன்ற முடியும். ஒவ்வொரு ஜீவனின் சக்தியும் அவரின் மூச்சாகும். உலகப் பாதுகாப் பிற்கும், தர்மத்தை நிலைநாட்டவும், பக்தர்களின் அவாவைப் பூர்த்தி செய்யவும், அவர் சங்கற்பத்தின்படி சிறப்புத்திருவுருவம் எடுத்து அவதாரத் தின் வருகையால் தமது மகிமைகள் மூலம் பக்தர்களுக்கு ஆனந்தமூட்டி மெய்ப்பிக்கிறார்.

திருமால் எடுத்த தசாவதாரங் களில் கிருஷ்ணாவதாரம் உலகம் போற்றும் உத்தம அவதாரம். ஆவணிப் பெருநாளில், ரோகிணி நன்னாளில், அஷ்டமித் திதியிலே இருளின் நடுவிலே, பேரொளியாக, கம்ஸனின் சிறையிலே, அற்புதமான தெய்வீகக் குழந்தையாக ஸ்ரீ கிருஷ்ணன் திருவவதாரம் செய்தார். இந்த நன்னாளையே ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தியாக உலகம் முழுவதும் கொண்டாடுகிறது. உலகினைப் படைத்து, காத்து உயிர்கள் உய்வதற்கு மறைகளைத் தந்தருளி இராமனாகவும், கிருஷ்ணனாகவும் அவதாரம் எடுத்து மானுடர்களுடன் கலந்தவன். குவலயம் காத்தவன். கருணை மொழிந்தவன் ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே. பூரணமான இராம அவதாரமும், கிருஷ்ண அவதாரமும் சிறப்பும், பெருமை யுமுடையன. “ஓம் நமோ நாராய ணாய” எட்டு எழுத்து மந்திரம். எனவே வாசுதேவன் தேவகிக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தான் போலும். குழந்தை பிறந்தவுடன் அழும். ஆனால் தெய்வக் குழந்தை கிருஷ்ணன் பிறந்தவுடன் பேசினான். எனவே ‘‘கிருஷ்ணம் வந்தேஜ கத்குரும்” என்பது அருள் வாக்கு. கிருஷ்ணன் என்ற பதத்திற்குக் கருமை நிறமுடையவன், நிறைந்த ஆனந்தமளிப்பவன் எனப் பொருள்.

கண்ணன் சுகதுக்கமிரண்டை யும் ஒன்றாகப் பார்த்தவன். மக்கள் இன்பத்தைப் பெறுவதற்குத் துக் கத்தை அனுபவிக்கவேண்டும். கண்ணன் இயற்கையை நேசித்தவன். பசுக்கள், யானைகள், மிருகங்களை நேசித்தவன். காளிங்கன் போன்ற துஷ்ட மிருகங்களை இரட்சித்தவன். கலியுகத்தில், கிருஷ்ண பகவான் புண்ணியப் பாதையைக் காட்டும்

புருஷோத்தமனாக விளங்குகின்றான். பவள வாயால் பூதகியின் பாலை அருந்துவது போல அவள் உயிரை உறிஞ்சினான். விஷம் என்றாலும் பாலை ஊட்டியபடியால் அவளுக்கு மோட்சப் பிராப்தியை அளித்தான். சகட வடிவம் கொண்ட அசுரனை மாய்த்தான். வெண்ணெய் திருடித் தின்றான். மத்தடிபட்டான். உரலிற் கட்டுண்டான். காளிங்கன் பாம்பின் ஆணவத்தை அடக்கிப் பிருந்தாவன மக்களுக்கு பொய்கையை உபயோகப்படச் செய்தான். ஜராசந்தனை அழித்தான். கம்சனை மாய்த்தான். சிசுபாலனை வதைத்தான். பாண்டவரைக் குருஷேத்திரப் போரில் காப்பாற்றினான். கௌரவர்கள் பூண்டோடு அழிந்தனர். அதர்மம் அழிக்கப்பட்டது. தர்மம் நிலை நிறுத்தப்பட்டது. ஸ்ரீகிருஷ்ணன் கீதையை குருஷேத்திரத்தில் அர்ச்சுனனுக்குப் போதித்தான். அது சமயம் தேரில் கொடியாக நின்ற ஆஞ்சநேயன் போதனைகளைக் கேட்டு ஞானபண்டிதனாக விளங்கினான். "பகவத்கீதை" சகல போகங்களுக்கும் உயர்வானதாகக் கருதப்படுகிறது.

திரௌபதியின் மானத்தைக் காத்தவன். பாஞ்சாலி, "லோகநாதா, ஈசனே" என்று கலங்கி, கண்ணன் ஒருவனே துணை என்று சரணடைகிறாள். கண்ணன் ஒருவனே துணை என்று, "காப்பாற்று கண்ணா" என்று அச்சுதன் பெயரைச் சொல்லி மயக்க முறுகிறாள்

"ஆறாகி இரு தடங்கண் அஞ்சன வெம்புல் சோர அளகஞ் சோர
வேறான துகில் தகைந்த கைசோர மெய்சோர வேறோர் சொல்லும்
கூறாமல் கோவிந்தா, கோவிந்தா என்ற ரற்றிக் குளிர்ந்து நாவில்
ஊறாத அமிழ் தூற உடல் புளகித்து உள்ள மெல்லாம் உருகினாள்."

திரௌபதியின் வஸ்திரங்கள் புதிது புதிதாக உருவாகிக் கொண்டே வந்தன. எம்பெருமானைச் சுத்த உள்ளத்துடன் யார் சரண் புகுந்தாலும் தோஷங்களைப் பார்க்காமல், சந்தேகம் கிளப்பாமல் எம்பெருமான் ஒப்புக் கொள்வான். சகல தோஷங்களும் அந்தச் சரணாகதி முயற்சியில் வெந்து சாம்பலாகிப்போகும்.

உதாரணம்;- பிரகலாதன், விபீடணன், திரௌபதி சரணாகதிக் கொள்கையை அமிர்தமாக எல்லா மார்க்கங்களும் ஏற்றுக் கொள்கின்றன. "பயப்படாதே, கவலைப்படாதே, எல்லாத் துன்பங்களிலிருந்தும் உன்னை விடுவிப்பேன்" என்று கூறிய நல்வழி அதுவாகும். பகவானின் கல்யாணகுணங்களை இரண்டு இதிகாசங்களும் போற்றுகின்றன. மகாபாரதத்தில் கண்ணனின் பெருமையைத் தொட்ட இடமெல்லாம் வியாசர் விளக்குகிறார். "கிருஷ்ணனே உலகங்களைச் சிருஷ்டித்தவன். கிருஷ்ணனே கதி" வேதமறிந்த பிராமணர்களும், ஆத்ம சொருபமறிந்த பெரியோர்களும் மகாத்மாவான கிருஷ்ணனையே

தர்மமாக அறிகிறார்கள். பேராபத்து வருங்கால் கிருஷ்ணனான ஹரியை நினைக்க வேண்டும்.

திரௌபதிக்கும் கஜேந்திரனுக்கும் அருளியதைப் போன்று நாம் எல்லாம் இழந்த நிலையில், அவனைச் சரணடைந்தோமானால், ஆண்டவன் நிச்சயம் கருணை புரிவான். தன்னைத் தானே தற்காத்துக் கொள்ளமுடியும் என்ற நம்பிக்கையும் திறமையும் அற்றபோது பரந்தாமனை முழுமனத்தோடு சரணடைந்தால் காப்பாற்றுவார். மனிதப் பிறவியின் நோக்கம் எங்களுக்கு இறப்பு நிச்சயம் என்று இறைவனைத் தேடவேண்டும். இன்ப, துன்பத்தைத் தேடாது விடுதலையைத் தேடவேண்டும். உலக பந்தம் இறைவனை நினைக்கவிடாது. கடவுளிடம் இருந்து நம்மைப் பிரித்து விடும். பொய்க் கௌரவத்தில், பெருமையில் மயங்காதிருக்க வேண்டும். உலக மதிப்பை எதிர் பார்ப்பவன் பகவானைச் சரணடைய முடியாது. உலக மயக்கங்களிலிருந்து விடுதலை பெற்றுச் சரணாகதி முறையைத் தொடங்க வேண்டும். குடும்ப, சமூக, தேசப் பற்றுக்களால் உண்டான போலி உறவுகளிலிருந்து விடுபட்டு மெய்யான முழுமுதற் கடவுளைச் சரணடைவதே நாம் உய்யும் வழி. மனப்பூர்வமாகத் தன்னைப் பகவானிடம் அர்ப்பணித்துக் கொண்டு "நீயே கதி! நீ தான் காப்பாற்றியருள வேண்டும்." என்று சரணாகதி அடைவோர்க்குப் "பக்தி யோகம் தரும்பலனை நானே தருகிறேன்" என்று கொடுத்து விடுகிறார். "ஈசுவரன் ஞானத்தை அருள்வார். பெருமாள் மோட்சத்தை அருளுவார்." பெருமாளை வேண்டிச் சரணாகதி அடைபவர்க்குச் செல்வம், ஞானம், மோட்சப்பதவி அனைத்தும் அருள்வார். தன்னுடைய முயற்சியாலும், பிறருடைய உதவியாலும் அடைய முடியாத ஒன்றைப் பெறுவதற்காக ஏற்பட்டது தான் சரணாகதி. "நீயே உபாயனாக இருக்கவேண்டும். வேறு ஒன்றையும் கேட்கமாட்டேன்." என்று சரணடையும் போது பெருமாள் மோட்சப் பதவிவரை எல்லாவற்றையும் அருள்வார்.

"கண்ணா! கலியுகக் கருணைத் தெய்வமே! எங்கள் குருவாயூர் அப்பா! காலங்களைக் கடந்த காவல் நாயகா! இரவையும் பகலையும் கடந்த ஏக ஜோதியே! நீ உன்னைச் சரணடைந்த பக்தர்களுக்குக் காட்டும் கருணையில்தான் எத்தனை லீலாவிநோதங்கள்! அருள் விளையாட்டுக்கள்! திருமகள் உறையும் உன் கருணா இதய வாசலின் திருக்கதவங்கள் ஏழையராம் எங்கள் அடைக்கலத்திற்காகத் திறந்திருக்கட்டுமே! உன் கமலத்திருப் பாதங்கள் எங்களுக்குக் காவலாகட்டுமே! உன் பாஞ்சசன்யம் எங்கள் அவல அச்சங்களைத் தீர்க்க முழங்கட்டுமே! உன் சுதர்சனம் எங்கள் தீவினைகளை அறுத்தெறியட்டுமே! உன் புன்னகைச் சாரலில் நாங்கள் இழைப்பாற உன் கருணைக் கண்கள் அருள்

புரியட்டுமே! உலகளந்த மாயவனே! மகாவிஷ்ணுவே! ஸ்ரீராமா! உன்னை அடைவதற்குச் சரணாகதியின்றி மற்றோர் உபாயமில்லை. யாகம் காக்க விசுவாமித்திரன் சரணடைந்தான். குகன், சுக்கிரீவன், விபீஷணன் இப்படிச் சரணடைந்தவர்களையெல்லாம் ஆட்கொண்டு அபயமளித்தாய். ஸ்ரீராமா! எம்மைக் காப்பதற்காகவே கோதண்டம் ஏந்தி நிற்கிறாய். சரணாகத வத்ஸலனே! சரணாகதரட்சகனே! இலட்சுமி நாராயணா! நின் திவ்விய திருநாமங்களை ஓதி, நின் திருவடிகளைச் சரணடைந்து, பரமாத்மாவான ஸ்ரீ கிருஷ்ணனில் ஐக்கியமாகித் தேனாமிர்தப் பேரின்பத்தைப் பெறுவோமாக!

*பரமாத்மாவே! சரணம், சரணம், சரணமையா.*

**ஆற்றங்கரை அப்பனுக்கு ஓர் அருள்மாலை**

**ஞானத்தின் ஞானச்சுடர் அமுதம் வாழியவே!**

ஆற்றங்கரை அப்பனின் சந்நிதானம்.
அடியாரைக் காத்திடும் சந்நிதானம்
ஆறு முக வேலனின் சந்நிதானம்
அவலங்கள் போக்கிடும் சந்நிதானம்
அன்ன தானக் கந்தனின் சந்நிதானம்
அன்னப்பசி தீர்க்கும் சந்நிதானம்
பால முருகனின் சந்நிதானம்
பாவங்கள் போக்கிடும் சந்நிதானம்
குன்றக் குமரனின் சந்நிதானம்
குறை தீர்க்கும் சந்நிதானம்
மயில் ஆடும் வள்ளி மாணாளன் சந்நிதானம்
வல் வினை போக்கிடும் சந்நிதானம்
ஆறுதல் அளிக்கும் அப்பன் சந்நிதானம்
ஐயப்பன் சோதரனின் சந்நிதானம்
எங்கள் குலதெய்வம் குடியிருக்கும் சந்நிதானம்
எல்லையற்ற அருள் தரும் சந்நிதானம்
காவடிகள் ஆடிவரும் கந்தன் சந்நிதானம்
கவலை தீர்க்கும் கந்தன் சந்நிதானம்
ஓம் முருகா சரணம்

திருமதி ஐ. தனலெட்சுமி
வவுனியா

சரிதான் என்பதை உறுதிப்படுத்திக்கொள், பிறகு முன்னேறு.

உ

# சித்தர்களின் சமய - தத்துவக் கொள்கைகள்

*திரு இ. சாந்தகுமார் அவர்கள்*

இறைவன் மனிதனுக்குள் ஊடுருவி நுழைய வேண்டும். மனிதனும் இறைவனுக்குள் தன்னை இரண்டறக் கலக்கச் செய்ய வேண்டும். இதுவே சித்தர்களின் கொள்கையாகும். மக்கள் இனத்திற்குப் பெரிதும் வேண்டப் படுவது "அறிவு" 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்பர் உயிரைப் பற்றியும் உடம்பைப் பற்றியும் நன்குணர்ந்தவர்களே கற்றறிந்தவர் எனப்படுவர். பிற்காலச் சித்தர் கொள்கை நடமாடும் கோயில் நம் உடல் என்ற அசையாத நம்பிக்கை உடையவர்கள் சித்தர்கள். உடலையும், உண்மையையும், உள்ளத்தையும் உணரும் தகுதிக்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் உறுதுணை யாவது புலனடக்கம், மனவடக்கம், சிந்தையடக்கம் ஆகிய கல்வியைக் கற்பிக்கும் அறிவியற் கலையைச் சித்தர்களின் அற்புதமான பாக்கள் தோறும் காணலாம். மக்களைப் பண் படுத்தும் உயரிய நெறிக்கு அவை கொண்டு செல்வன. 'நாம் உய்ய வேண்டும் ஆயின் நன்கு உழைக்க வேண்டும்' என்பதே சித்தர்களின் முடிபாகும்.

சித்தர்கள் பெரும் தீரர்கள். சிந்தனையாளர்கள். அவர்கள் ஒருபோதும் எதற்கும் தயங்குவதில்லை. இவ் உலகில் உள்ள துன்பங்களுக்கெல்லாம் காரணம் வலிவு இல்லாமையே என்ற உண்மையை உணர்ந்து, உணர்த்தியவர்கள் சித்தர்கள். தம்முடைய முன்னோர்களின் பட்டறிவின் சாரமே ஞானமாகும். பட்டறிவு என்பது 'அனுபவத்தினாற் கிடைத்த அறிவு' வல்லவர்களின் நல்லவர்களின் வாழ்வே அறிவு. துன்பத்திற்குப் பின் இன்பம். தோல்விக்குப் பின் வெற்றியும், வீழ்ச்சிக்குப்பின் ஏற்றமும், சண்டைக்குப்பின் சமாதானமும், ஊடுதலுக்குப்பின் கூடுதலும் பட்டறிவின்பாற்படும். இந்த உலகம் ஒரு பெரிய பயிற்சிச்சாலை வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள் உண்மையை ஆராய்ந்து உரைப் பதையே நம்முடைய வலிமையாகக் கருதினர் சித்தர்கள்.

சித்தர்களே யோகப்பயிற்சி யால் ஆன்மீக சக்தியை வளர்த்து மனம் அடங்கத் தம்முடைய மனத்திற் குள்ளே இறைவனோடு ஒன்றியிருந்து தமது பட்டறிவை உலகோர்க்கு எடுத்து உபதேசித்தவர்கள் சித்தர்கள். உணர்ந்த சமய அனுபவத்திற்கு

ஆசாரம், அனுட்டானங்கள், விபூதி, உருத்திராக்கம், தீட்சை முதலியவை முக்கியமல்ல என்றார்கள். இதுவே சித்தர்களுக்கும் மற்றைய மெய்யடி யார்க்கும் உள்ள வித்தியாசம்.

சித்தர்கள் 'அறிவர்கள்' என்று தமிழில் அந்தக் காலத்தில் அழைக் கப்பெற்றனர். இதற்கு ஒரு சான்று தொல்காப்பியத்தில் காணப்படு கின்றது.

"மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன்"

என்று கூறப்படுகின்றது. சித்தர் என்னும் போது எப்பொருளில் வழங்கினர் என்பது தெரியவில்லை பிற்காலத்தில் "சித்தர்கள்" எனச் சிலரைக் குறிப்பிடுகின்றனர். சில குறிப்பிட்ட இயல்புகளோடு கூடிய அடியவர் இனமாக அவர்களைக் காண்கிறோம். ஆயின், திருமூலர் காலத்தில் வாழ்ந்து வந்த சித்தர்களைப் பற்றி நாம் தெளிவாக அறியமுடியவில்லை. திருமந்திரத்தில் சித்தரைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. சித்தர்களை அறுதியாகவும் உறுதியாகவும் வரையறுத்துக் கூறமுடியாது. திருமந்திரப் பாடல்

"பத்தர் சரியைப் படுவோர் கிரியை யோர்
அத்தரு தொண்டர் அருள் வேடத்தாரு வோர்
சுத்த வியமாதி சாதகர் தூயோர்
சித்தர் சிவஞானம் சென்றெய்து வோர்களே"

என்னும் பாடல் சரியை, கிரியை, யோகங்களையும் கடந்து ஞானநிலை அடைந்தவர்களைச் சித்தர்கள் எனக் கூறுகிறது. பக்தர், தொண்டர், யோகர், சித்தர் இவர்கள் ஒருவரின் ஒருவர் உயர்ந்தவராகக் கூறப்படும் நிலையில் ஞானியர் களையே 'சித்தர்' என்கிறார் என்பது தெளிவு. சரியை, கிரியையாளர்கள் அளவில் வேறுபாடு காணப்படினும் திருவாசகமும் ஞானிகளையே சித்தர் எனக் கூறுவதாகக் கொள்ளலாம்.

"தொண்டர்கள் தூவிச் செல்வீ பத்தர்காள் சூழப்போகீ
ஒண்டிறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்
திண்டிறற் சித்தர்களே கடைக் கூழை சென்மின்கள்
அண்டர் நாடாள்வோம் நாம் அல்லற் படைவாராமே"

எனத் திருவாசகம் கூறுவதோடு அட்டாங்க யோகவழி நின்று ஞானம் பெற்றவர்களையே சித்தர்எனத் திருமந்திரம் விதந்து கூறுகிறது.

"சேர்ந்த எண் யோகத்தர் சித்தர் சமாதியோர்
யோக சமாதி உகந்தவர் சித்தரே"

என்று பலவாறு சித்தர் பற்றிய கருத்துக்கள் நிலவுகின்றன. இவ்வாறு சித்தர் என்பதற்குரிய பொருள் பலவாறு கூறப்படுகின்றது.

சித்தர்கள் என்னும் போது சித்திகள் கைவந்தவர் எனலாம். இவர்கள் பல சாதனைகளினால் குண்டலினியை எழுப்புதல் முக்கியமாகவுள்ளது. சங்க நாளிலும் 'நிலம் தொட்டும் புகார்' லான மேலும் முந்நீர்க்காவிரி செல்வார் என்பர் இங்கும் சித்திகளே கூறப்படுகின்றன. சைன ஸநாக்கத்திலும் சித்திகள் கூறப்படுவதுண்டு.

"பொதுவாகத் தந்திர வழி வாழ்கின்ற யோகியர்களைச் சித்தர் என்பர்" என அறிஞர்கள் குறிப்பிடுவதும் கருதத்தக்கது. சேலம் மாவட்டத்தில் சித்தர்கள் வாழ்விடம் என்று கருதப்படும் கஞ்சமாலையைச் சித்தர் கோயில் என்று குறிப்பிடுகின்றனர். அங்கிருக்கும் கோயிலின் சிவனைச் 'சித்தேஸ்வரன்' என அழைக்கின்றனர்.

தமிழில் வழங்கும் "சித்து" என்ற சொல்லுக்கு "அருள் விளையாட்டு" என்று பொருள். தொண்மையான இலக்கியமாகிய தொல்காப்பியத்திற் காணப்படும் நிறைமொழி மாந்தர் எனும் சொல் சித்தர்களைக் குறிப்பது எனக் கொள்ளலாம்.

"நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறை மொழி தானே மந்திரம் என்ப"

எனக் குறிப்பிடப்படுகின்றன. இவை தவிர, குறுந்தொகை 130ஆம் பாடல் சித்தரைப் பற்றி கூறுகின்றன.

சித்தத்தை வென்றவர் சித்தர் என்றும் அவரது அருளனுபவ நிலை சித்து அல்லது சித்தி என்றும் கூறலாம் இதைவிடச் சித்தி என்ற சொல்லுக்கு 'அடைதல்' என்பது பொருள். இதனை இன்னும் பரவலாகப் பேச்சு வழக்கிலும் காணலாம். 'போனகாரியம் சித்தியாச்சு' 'சொல்லியது சித்தியாச்சு' என்பது நாம் நடைமுறையிலே காண்கின்ற உண்மையாகும்.

சித்தர் பாடல்கள் புலவர்களுக்கும் பாமரர்களுக்கும் ஒருங்கே விருந்தாக அமைந்திருக்கக் காண்கிறோம். "கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பார்" எனக் கூறுகின்றனர். அவர்கள் உயர்வு தாழ்வு, இன்ப துன்பம், புகழ்ச்சி இகழ்ச்சி, விருப்பு வெறுப்பு இல்லாதவர்கள். இவர்கள் எல்லாவற்றையும் கடந்தவர்களாயும் இறைவனுடன் யோக நிலையில் கலந்தவர்களாகவும் உள்ளார்கள். என்று எடுத்துக் காட்டப்படுகின்றது.

(தொடரும்....

**சமயங்களுக்கெல்லாம் தாய்**

சைவம், எல்லாச் சமயங்களுக்கும் தாயகமாகவும், நாயகமாகவும், விளங்கும் ஒப்பில்லாத உண்மைச் சமயமாகும்.

தேவைகள் இல்லாதவனே பெரிய பணக்காரன்.

உ

# நாவலர் பெருமான் எழுத்துக்கதை

**செல்வி சரவணமுத்து . விசி அவர்கள்**

ஈழ நன்னாட்டிலும் தென்னகத்திலும் சைவநன்னெறியும் தண்டமிழ் மொழியும் ஏற்றம் குன்றி நின்ற காலத்திலே ஆங்கிலமே நாகரிகம், கிறிஸ்தவமே அரசியல் மதம் என மக்கள் மயங்கி நின்ற நேரத்தில் பாதிரிமார் சூழ்ச்சியும் வஞ்சகமும் மக்களைப் பலிகொண்ட காலத்திலே யாழ்ப்பாணத்து நல்லூரிலே நாவலர் பெருமான் என்னும் ஞானசூரியன் தோன்றியது. நாவலர் வருகையால் சைவமும் தமிழும் ஏற்றமும் வாழ்வும் பெற்றன.

நாவலர் பெருமான் கந்தப் பிள்ளை என்னும் பெரியோருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் நன்மகனாகக் கி.பி 1822ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி பிறந்தார். வளர்மதி என வளர்ந்து கல்வி பயிலத் தொடங்கினார். இருபாலைச் சேனாதி ராஜா முதலியாரிடமும், நல்லூர்ச் சரவணமுத்துப் புலவரிடமும், தமிழ் இலக்கண, இலக்கியங்களைக், கற்றுத்தேறினார். பீற்றர்பார்சிவல் துரை மகனாரின் ஆங்கிலக் கலாசாலையில் ஆங்கிலம் கற்று அம்மொழியிலும் புலமை பெற்றார். வடமொழியிலும் தேர்ச்சியெய்தினார். இவரது உயர்ந்த புலமையைக் கண்ட பார்சிவல் துரைமகனார் தமது கலாசாலையில் இவரை ஆசிரியராக அமர்த்தினார். பாதிரியாருடைய வேண்டுகோளின் படி ஆங்கிலத்திலிருந்த கிறிஸ்தவ வேதத்தை தமிழில் மொழி பெயர்த்தார். அது அக்காலத்தில் இருந்த இந்திய அறிஞர்களாலும், இலங்கை அறிஞர்களாலும் சிறந்த மொழிபெயர்ப்பெனப் போற்றப்பட்டது,

நாவலர் பெருமான் கிறிஸ்தவ மதப் பள்ளியில் ஆசிரியராயிருந்த காலத்தில் கிறிஸ்தவப் பாதிரிமார், சைவர்களை அஞ்ஞானிகள், என இகழ்ந்தும், மதமாற்றஞ் செய்தும் கேடுகள் புரிவதைக் கண்டார். பழைமையும் பெருமையும் நாகரிகமும் வாய்ந்த தமிழ் மொழியும் சைவ சமயமும் அடைந்துள்ள தாழ்வினை எண்ணி எண்ணி வருந்தித் துடித்தார். தமிழ் சைவம் எனும் இரண்டின் வளர்ச்சிக்காகத் தமது வாழ்வை அர்ப்பணம் செய்ய முனைந்தார். மாணவர்களைச் சேர்த்து அவர்களுக்குக் கல்வி நூல்களையும், சமய நூல் களையும் பிற்பகலிலும் இரவிலும் கற்பித்து வந்தார். இவரிடம் பாடம் கேட்டுப் பெரும்புலமை எய்தி விளங்கியவர்கள் பலர். அவர்களுள் சதாசிவப்பிள்ளை, நடராஜஐயர், ஆறுமுகம் பிள்ளை, வித்துவ சிரோமணி, பொன்னம்பலப்பிள்ளை, வைத்தியலிங்கம்பிள்ளை, தருக்ககுடாரதாலுதாரி, திருஞானசம்பந்த பிள்ளை

▶▶ பழிக்குப்பழி ஒருபோதும் காயத்தை ஆற்றாது. ◀◀

முதலியவர்கள் விசேடமாகக் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்கள் நாவலர் காலத்திலும், அவருக்குப் பின்னும் சைவம், தமிழ்மொழி என்னுமிரண்டின் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தனர்.

நாவலர் சைவசமயத்தை வளர்ப்பதற்காகக் கையாண்ட முதல் வழி சைவப்பிரசங்கமாகும். இவர் சொற்பொழிவுகள், கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் விரும் பத்தக்க பெருமையினை உடையனவாய் இருந்தன. ஊர்கள் தோறும் சொற்பொழிவுகளை நடாத்தி மக்களிடையே புதியதொரு விழிப் புணர்ச்சியை ஊட்டினார். அதனால் மீண்டும் சைவசமயம் தலையெடுக்கலாயிற்று.

தமிழ் மாணவர்களிடையே தமிழ் உணர்ச்சியையும் சைவப் பற்றையும் வளர்ப்பதற்காக நாவலர் தாமே யாழ்ப்பாணத்திலும், சிதம்பரத்திலும், சைவ வித்தியாசாலைகளைத் தாபித்தும் பிற இடங்களில் பிறரைத் தாபிக்கச் செய்தும் ஆக்கம் தேடினார். பாதிரிமாரின் கையில் இருந்த கல்வித் தொண்டு சைவ நன்மக்களிடையே புகுந்ததால் மாணவர்கள் இளமை முதற் கொண்டே சைவசமய அடிப்படையில் கல்வி கற்பதற்கு வாய்ப்பு ஏற்படலாயிற்று.

மாணவர்களுக்கு வேண்டிய புதிய தமிழ் நூல்களை வெளியிடவும், பழந்தமிழ் நூல்களை அழிந்து போகாது அச்சிற் பதிப்பிக்கவும் நாவலர் விரும்பினார். அதனால் ஓரச்சு யந்திரசாலையை நிறுவினார். புதிய நூல்களை எழுதி எழுதிக்குவித்தார். செல்லரித்தும் இராமபாணத்தால் தொளைக்கப்பட்டும் இடையே முறிந்து அழியும் நிலையிலிருந்த பழைய தமிழ் ஏடுகளைத் தேடினார். இராப்பகல் ஓயாது ஒப்பு நோக்கி வழுவின்றி அச்சிற் பதிப்பித்து வெளியிட்டார். பிறரையும் அங்ஙனம் செய்யத் தூண்டினார். தமிழன்னை புதியதொரு அழகுநடைபூண்டு பவனி வரலாயினாள். சைவத்தையும் தழிழையும் சூழ்ந்துகொண்ட காரிருள் அகன்றது நாவலர் உளம் களிப்பெய்தினார்.

நாவலர் யாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலும் பல பிரசங்கங்களைச் செய்தார். இவரது பேச்சுவன்மையை உணர்ந்த திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு "நாவலர்" என்னும் விருதினைத் தந்து சிறப்பித்தது. தமிழில் தூய இனிய வசன நடையினாக்குந் திறனுக்கொரு வழிகாட்டியாய் வந்தவர் நாவலர் அவர்களே! அறிஞர்கள் 'வசனநடை கைவந்த வல்லாளர்' என்று இவரைப் போற்றினர். தமிழ் வாக்கியங்களுக்குக் குறியீடு இட்டு எழுதும் வழக்கத்தை கொண்டு வந்தவரும் இவரே! நாவலர் தமிழ்ச் செய்யுள்கள் புனைவதிலும் வல்லவராய் இருந்தார். நாவலர் தாம் எந்த இலட்சியத்தைச் சிறந்ததெனக் கருதினாரோ அந்த இலட்சியத்திற் சிறிதும் வழுவாது வாழ்ந்து காட்டினார்.

நாவலர் பெருமான் இலக்கியம், இலக்கணம், நீதி, நியாயம், சைவ சித்தாந்தம், சைவாகமம் முதலிய சகல நூல்களிலும் வல்லவர்.

செந்தமிழ் நூல்களைத் திருத்தி அச்சிடும் செயலிலும் வல்லவர். கசட்டு நெறிகளை மறுத்தெழுதும் கண்டனத்திலும் வல்லவர். இன்னும் சிவபூசை தேவாரம் திருவாசக பாராயணம், சைவாசாரம், அருள், ஆண்மை, கொடை, சால்பு, ஆகியவற்றிலும் சிறந்தவர். புகழ், அதிகாரம், பொருள் வரவு முதலியன கருதி மனிதரை வழிபடாதவர்.

நாவலர் பெருமான் இயற்றிய நூல்களாவன; பாலபாடங்கள், சைவ வினாவிடை நூல்கள், இலக்கணவினா விடை, இலக்கணச்சுருக்கம், பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராணவசனம், கந்தபுராண வசனம், சிதம்பர மான்மியம், கோயிற் புராணவுரை, சைவ சமய நெறியுரை, நன்னூற் காண்டிகையுரை, முதலியன. அச்சிட்ட நூல்களாவன; கந்தபுராணம், பெரியபுராணம், சேதுபுராணம், திருக் குறள், பரிமேளழகர் உரை, தொல் காப்பியம், சேனாவரையர் உரை, இலக்கணக் கொத்து, தொல்காப்பிய சூத்திர விருத்தி, பிரயோக விவேகம், தருக்க சங்கிரகவுரை, நன்னூல் விருத்தியுரை, முதலியனவாம்.

நாவலர் தமிழுக்கும் சைவத் திற்கும் அளப்பரும் பணி புரிந்து கி. பி 1879ஆம் ஆண்டுக்குச் சரியான பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் 21ஆம் திகதி (5.12.1879) இறைவன் திருவடி நீழலை அடைந்தார். இவர் குருபூசைத் தினம் கார்த்திகை மாதத்து மக நட்சத்திரமாகும்.

நல்லை நக ராறுமுக நாவலர் பிறந்தில ரேற்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே- எல்லவரும்
ஏத்து புராணாகமங்க ளெங்கே பிர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கேயறை.

## உயிரை வளர்ப்பது

உடம்பை உணவு வளர்க்கும். உள்ளத்தை அறநெறிகள் வளர்க்கும், உயிரைச் சமயஞானம் வளர்க்கும், வெள்ளம் உயர்ந்தால் மலர் உயரும். உள்ளம் உயர்ந்தால் மனிதன் உயர்வான். ஆதலால், இனிய கனியமுதம் அன்ன ஆன்றோர்கள் கூறும் அறிவுரைகளை நாம் எப்போதும் தப்பாது கேட்டும் ஓதியும் உய்வு பெறுதல்வேண்டும்.

உ

# ஆசை ➡ அலைச்சல் ➡ துக்கம் ➡ பரிகாரம்

*திரு சு. இலங்கநாயகம் அவர்கள்*

ஆசைக்கு அளவில்லை என்கிறார் தாயுமானசுவாமிகள். இந்த நில உலகு முழுவதையும் ஆளும் ஒருவன், கடல் முழுவதிலும் தன் ஆணையைச் செலுத்தவே ஆசைப் படுவான். குபேரனைப் போல் செல்வம் படைத்தவனாயினும், இரசவாத வித்தை மூலம் இரும்பையும் பொன் னாக்கிக் குவிக்க அலைவர். நெடுங் காலம் வாழ்ந்த முதியவரும் மேலும் பல வருடம் வாழ ஆசைப்பட்டுக் காய கல்பம் தேடி அலைகிறார் என்கிறார். இப்படியாக மனிதன் ஆசைகள் அதிகரித்து அலைகிறான். அது நிறை வேறாதுபோகத் துக்கம் அடைகிறான். இதனைத் திருமூலரும் --

“ஆசை அறுமின் ஆசை அறுமின்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்
ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பம்
ஆசை விட விட ஆனந்தமாமே” என்கிறார்.

அபிராமிப் பட்டரும் ஆசைக் கடலிலே அகப்பட்டு, அலை அடித்து அலைந்து, கடைசியில் அருளற்ற அந்தகன் பாசக்கயிற்றில் அகப்பட்டுத் துக்கப்படும் வேளையில் அம்பாள் தனது வாசக் கமல பாதத்தைத் தனது தலையில் வைத்து அருளிய நேசத்தை நினைந்து நெஞ்சுருகுகிறார்.

ஆனால் ஆசையில்லாது உலகியலில் வாழமுடியுமா? என்பது கேள்வி. உலகியலில் ஆசையில்லாது வாழமுடியாது. ஆனால் அதற்கும் ஓர் அளவு உண்டு. “பேராசை பெருந் தரித்திரம் என்பர். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. ஒவ்வொரு குடும்பத்திலும் இளம் பராயத்திலிருந்தே பிள்ளைகள் ஆசை ஊட்டி வளர்க்கப்படுகின்றனர். நன்றாகப் படிக்கவேண்டும், திறமையாகச் சித்தியடைய வேண்டும், வைத்தியராக பொறியியலாளராக, கணக்காளராக, அதிஉயர் பதவி வகிக்கவேண்டும். நன்றாகப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை ஊட்டியே வளர்க்கப்படுகிறார்கள். பாடசாலைகளிலும் கல்வித்துறை, விளையாட்டுத்துறை, இயல்இசை நாடகத்துறை போன்றவற்றில் போட்டிகள் மூலம் திறமைசாலிகளுக் குப் பரிசில்களும் வழங்கி உயர்வுக் காக ஆசையூட்டப்படுகிறார்கள். ஆனால் மொன்ரிசரி அம்மையார் கல்லூரிகளில் பரிசில் வழங்கும் திட்டமூலம் மாணவர்கள் ஊக்குவிக்

கப்படுவதை ஏற்றுக் கொள்ள வில்லை. போட்டிகள், பரிசில் வழங்கல்கள் சிலசமயம் பொறாமைக் கும் வழிவகுக்கும் என்கிறார். பாடநூல் களில் இனங்களை வேறுபடுத்திக் காட்டும் படங்கள், சமயவேறுபாடு போன்றவையும் பிள்ளைகள் மனத்தில் பொதுப் பண்பை விடுத்துத் தனித் துவத்தை மேம்படுத்துகின்றன. கணித பாடங்களில் கலவைக் கணக்கு, வட்டி, தொடர்வட்டி, இலாபம் ஈட்டல் போன்ற எண்ணக் கருக்கள் சிறுவர்கள் மத்தியில் மனப்பதிவை ஏற்படுத்து கின்றன. உதாரணம் கலவைக் கணக் கில் விலை கூடிய நல்லினத் தேயிலையும், விலை குறைந்த தரம் குறைந்த தேயிலையையும் கலந்து விற்பதன் மூலம் கூடிய லாபம் பெற லாம் என்ற போதனை, பிற்காலத்தில் வியாபாரத்தில் ஈடுபடும் ஒருவன் கலப்படம் செய்வதற்கு வழி வகுக் கிறது.

அதேவேளை இளம் பராயத்தினருக்குத் தர்மசாஸ்திரம், மனுநீதி சாஸ்திரம், நீதிக்கதைகள், அறிவூட்டற்கதைகள், நீதிநூற் கொத்து போன்றவற்றைக் கற்பிப்பதன் மூலம் பிள்ளைகளிடம் ஒழுக்கம், நீதி, நேர்மை, பிறரை நேசித்தல், அன்பு போன்ற உயரிய பண்புகள் பற்றிய அறிவை வளர்க்க வேண்டும். இவை அவர்களின் வாழ்வில் நல்ல பண்புகளைக் கடைப்பிடிக்க உதவும். மேலும்

“அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகியாங்கு.”

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க இவ்வுலக வாழ்வுமட்டும் அல்லாது மறுவுலக வாழ்வு ஒன்று உண்டு என்றும், பொருளோடு அருளும் வளர வேண்டும் என்ற கருத்தும் சிறுவர் மனதில் பதியச் செய்ய வேண்டும்.

நாம் எல்லோரும் பரம் பொருளைப் பற்றிய உண்மையான ஞானத்தைப் பெறமுயலவேண்டும். உலக வாழ்வில் நாம் பெறும் இன்பம் அல்லது சுகம் நித்தியமாக நிலைத்து நிற்பதில்லை. மரத்தின் கிளைகள் ஆடும் போது இடுக்கு வழியாக வரும் வெளிச்சம், அடுத்த நிமிடம் முகில் வந்து மூடிக்கொள்வது போல உலகத்தில் துன்பத்துக்கு நடுவில் கொஞ்சம் இன்பம் தலையை எட்டிப் பார்த்துவிட்டு ஓடிமறைகிறது. ஆனால், நிரந்தர இன்பம் என்பது உலகத்திற்கு காரணனான இறைவன் ஒருவனை அறிந்து கொள்வதனாலேயே ஆகும்.

உலக வாழ்வில் சகல மனிதர்களுக்கும் அளவில்லாத கஷ்டங்கள் உண்டாகத்தான் செய்யும். செல்வந்தர் உயர் பதவியில் உள்ளவர்களுக்கு கஷ்டம் இல்லை என்று மற்றவர்கள் நினைக்கலாம். அப்படி நினைத்துத் தாமும் பணக்காரனாக வரப்பாடுபடலாம். ஆனால் பணக்காரனை, உயர்

பதவியில் உள்ளவனைக் கேட்டால் தெரியும் அவனுக்கு இருக்கும் கஷ்டங்களை. பணம் பதவி உள்ளபோது இருக்கும் மகிழ்ச்சியிலும் பார்க்க, அப்பணம், பதவி பறிபோகக் கூடாது என்ற கவலை அவனை அதிகமாக வாட்டும். ஒருவன் தானே புத்திசாலி, தானே யோக்கியன், தானே அழகுள்ளவன் என்று தனக்குள் நினைத்துக் கொண்டு இருப்பது போலவே, துக்கம் உள்ளவனும் நினைக்கிறான். ஆனால் துக்கம் உடன் பிறப்பு. நம் பூர்வ கன்மமே இதற்குக் காரணம். இதிலிருந்து ஒருவரும் தப்ப முடியாது. கன்மத்தை அனுபவித்தே தீர வேண்டும்.

ஒருவனுக்கு ஒரு நோய் ஏற்பட்டால், வைத்தியர் ஒரு காரணம் கூறுவார், மனோதத்துவ நிபுணர் மற்றொரு காரணம் சொல்வார். மந்திரவாதி தெய்வக் கோளாறு என்பான், சோதிடன் கிரக பலன் என்பான், ஆன்மீகவாதி கன்மத்தின் பலன் என்பார். இப்படியாக நமது வாழ்வில் வரும் துன்பங்களுக்குப் பலரும் பல காரணங்களைக் கூறுவதால் நமக்குக் குழப்பமும் ஏற்படுகிறது. இப்படியாக காரணங்களில் எது சாத்தியம் என்று சிந்தித்தால் எல்லாம் சரிபோலத்தான் தோன்றும்.

ஆனால், இவை எல்லா வற்றிலும் ஆதிகாரணமாக அமைவது நமது கன்மம் என்பது தான் நிச்சயம். அந்தக் கர்மா தான் பல விளைவுகளை உண்டாக்குகின்றது. மழை பெய்வது ஒரு நிகழ்வு. அதன் காரணமாகப் பூமி ஈரமாதல், ஈசல் வெளிவருதல், தவளை கத்துதல், புல் பூண்டு தளிர்த்தல், சில பொருட்கள் அழுகுதல், இப்படியாக பல விளைவுகள் ஏற்படுகின்றன. எனவே இப்படியாக பல விளைவுகள் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் மழையாகும். விஞ்ஞான இரீதியாகவோ அல்லது இயற்கையாகவோ ஒரு விளைவு [Effect] இருந்தால் அதற்கு ஒரு காரணம் [Cause] இருந்தே ஆக வேண்டும். நோய் மாத்திரமல்ல எமது வாழ்வில் பணத்தால், பதவியால், தேக பலத்தால், அறிவுச் சக்தியால் பல பிரச்சினைகள் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. எனவே துன்பம் என்பது விளைவு. கன்மம் என்பது காரணம்.

இப் பிரபஞ்சம் முழுவதும் காரணம் - விளைவு, செயல் - பிரதிச் செயல் (Action - Reaction) என்ற அடிப்படையில் இயங்குகின்றது. ஜடப்பிரபஞ்சமும், ஜீவப் பிரபஞ்சமும் ஒரே மூலத்திலிருந்து வந்தவை. (அண்டம் ஐம்பூத ஆக்கம், பிண்டமும் ஐம்பூத அடக்கம்) ஜகத்துக்கு உள்ள விதி மனித வாழ்விலும் உண்டு. நாம் அனுபவிக்கும் சுகதுக்கங்களுக்குக் காரணமாக அமைவது இந்தப் பிறப் பிலோ அல்லது முற்பிறப்பிலோ செய்த பாவ புண்ணியங்கள் தான். இது மாத்திரம் அல்ல மற்றவர்களது கன்மத்துக்கும் நமக்கும் தொடர்பு

உண்டு. உதாரணம் நமது குழந்தைகளுக்குத் தீரா நோய் வந்தால் மாதா பிதா செய்த பழி என்பர். இரு உடல்களும் வேறானாலும் குழந்தைபடும் வேதனையால் நாமும் துன்பம் அடைகிறோம். அதேவேளை நமக்கு ஒரு தீங்கு நடந்தால் அது நமது எதிரியின் புண்ணிய பலன் என்றும் கருதலாம்.

எனவே, பூர்வ கன்மா பற்றி அதிகம் சிந்தியாது இனிமேலாவது கர்ம பாரம் ஏறாமற் பார்த்துக் கொள்வது முக்கியம். பழையதற்குப் பரிகாரம் தேடுவதை விடுத்துப் பாவம் பண்ணாமல் வாழ்வதற்கு இறைவனை வழிபாடு செய்து கொள்வது முக்கியம். நாம் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்று வழிகளாலும் கன்மங்கள் செய்கிறோம். உடம்பால், வாக்கால் செய்யும் பாவங்களிலும் பார்க்க மனத்தால் கேடுசெய்ய நினைப்பதும் பெரிய பாவமாகும். “கெடுவான் கேடு நினைப்பான்.” என்ற முதுமொழியும் ‘‘உள்ளத்தால் உள்ளலும் தீதே, பிறன் பொருளைக் கள்ளத்தாற்கள்வோம் எனல்” என்ற வள்ளுவன் வாக்கு மனத்தால் செய்யும் பாவத்தைத் தெளிவு படுத்துகின்றன.

எனவே, நாம் துக்கத்திலிருந்து விடுபட்டு, மனச்சாந்தியுடன் வாழ் வதற்கு ஆசைகளைக் குறைத்து, ஆண்டவனை வழிபாடு செய்து, எவ் வுயிரும் என் உயிர் போல் எண்ணி, இரங்கி, அன்புசெய்து, எல்லோரும் இன்புற்று இருக்கவேண்டும் என்றும், நாடெங்கும் நல்லபடி வாழ்ந்தால் கேடு ஒன்றும் இல்லை என்ற மனப் பாங்குடன் வாழப் பழகிக் கொள்வோ மானால் துக்க பரிகாரநிலை ஏற்பட்டு மனச்சாந்தியுடன் வாழ அது வழி வகுக்கும்.

## கண்ணுக்குத் தெரியாதவை

கண்ணுக்குத் தெரிந்த இந்த உலகத்திற்குச் சேவை செய்வதோடு, கண்ணுக்குத் தெரியாத கடவுளுக்கும் சேவை செய். ஏனென்றால், உன் மனைவியைக் காப்பாற்றுவது மிக மிக அவசியம். ஏன்? அவள் உன் வாழ்க்கைத் துணைவி, இம்மைக்கும், மறுமைக்கும் அவள் உனக்குத் துணையாக நிற்கிறாள். மனைவி உனக்குச் செய்யும் பணிவிடைகள் கண்ணுக்குத் தெரிந்தவை. ஆனால், தவம் இருந்து கருவுற்று பெற்றுப் பாலூட்டி மருந்து கொடுத்து தான் பத்தியமிருந்து செய்த தாயின் உதவிகள் உனது கண்ணுக்குக் காணாதவை.

ஆகவே கடவுள், தாய் போன்றவர். உலகம் மனைவி போன்றது.

▶▶ மௌனத்தை விடப் பேச்சிற்கு வருந்தியோர் அதிகம். ◀◀

உ

# சைவ சித்தாந்தம் கூறும் பேருண்மைகள்

*திரு கு. சிவபாலராஜா அவர்கள்*

உலகில் மூவகைப் பொருட்கள் உள்ளன. அவை

1. அறிவித்தாலும் அறியாத கல் மண் முதலிய சடப் பொருள்கள்.
2. அறிவித்தால் அறியும் ஆன்மாக்கள் - மனிதன், மிருகம், மரம், செடி
3. பிறர் அறிவிக்க வேண்டாது தாமே அறியும் - கடவுள்.

இந்த வகையில் உருவாகியதே எமது சைவசித்தாந்தக் கோட்பாடுகளாகும். சித்தாந்தம் என்பதற்கு "முடிந்த முடிவு" என்பது பொருள். உலகம் பிறர் அறிவிக்க வேண்டாது தாமாகவே அறிய வல்ல இறைவன் வாழும் எல்லைக்கும், அறிவித்தாலும் அறியமாட்டாத கல் மண் முதலிய சடப்பொருள்களின் எல்லைக்கும் இடையே அறிவித்தால் அறியும் உயிர்கள் யாவும் வாழ்கின்றன. இவற்றுள் மனிதன் ஒன்றே பகுத்தறிவுத் தன்மை கொண்ட மனத்தால் அறியக் கூடிய வல்லமை பொருந்திய ஆன்மாவாகும். ஏனைய மிருகம், பறவை முதலிய உயீர்கள் யாவும் ஐந்தறிவுப் பிராணிகள் மக்கள் என்பதுவும் மாக்கள் என்பதுவும் ஓரறிவினாலும் ஓர் எழுத்தினாலுமே வேறுபடும் உயிரினங்களாகும்.

அறிவித்தால் அறியும் மனித உயிர்களுக்காகவே பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் உண்மைகள் விளக்கப்பட்டுள்ளன. பதி என்பது இறைவன் எனவும் பசு என்பது உயிர்கள் (ஆன்மாக்கள்) எனவும் பாசம் என்பது தளை, கட்டுக்கள் அல்லது மலம் எனவும் குறிப்பிட்டு விளக்கப்பட்டுள்ளன. பதியாகிய இறைவனே பசுக்களாகிய உயிர்களையும் பாசமாகிய தளை கட்டுக்களையும் படைத்துள்ளார் என எடுத்துக் கொண்டால் அப்பதியாகிய இறைவன் எங்கிருந்து அல்லது எவற்றிலிருந்து பசுவையும் பாசத்தையும் படைத்தார் என்பது கேள்வியாகின்றது. தன்னிடமிருந்தே பசுவும் பாசமும் தோன்றின எனின் இறைவனுக்கும் உயிர் கட்டுக்கள் என்பனவற்றின் இயல்பான குறைபாடுகள் சொந்தமாகி விடுகின்றன, அல்லவா? அவ்வாறாயின் அவ்விதி பதியின் இலக்கண வரம்புகளுக்கு அப்பாற்பட்டவையாகி விடும். எனவே தான் மெய்கண்டதேவர் அவர்கள் மிகவும் ஆராய்ந்து பதி பசு பாச விளக்கமாகிய சைவ சித்தாந்தக் கோட்பாட்டினை உலகிற்கு அளித்துள்ளார்.

இறைவன் சொருப இலக்கணமாய் உள்ள நிலை நமது அறிவுக்கு எட்டாத பேரின்பப் பொருள். இந் நிலையை மணிவாசகப் பெருமான் போன்ற சீவன் முத்தர்கள் மட்டுமே

இறைவனை நேரில் கண்டதாக பாடியுள்ளார்கள். இறைவனோடு இரண்டறக் கலந்துள்ள இந்நிலை எல்லா உயிர்களுக்கும் கிடைக்காத பேறு. சொருப நிலையில் இறைவன் எமக்கு எட்டாத பொருளாக விளங் குகின்றார். அருவமாய் அருவுருவாய் உருவமாய், குறியும் குணமும் இல்லாதவராக, உயிருக்கு உயிரானவராக இறைவன் அந் நிலையில் விளங்குவதாக உமாபதி சிவாச்சாரியார் அவர்கள் கூறகின்றார்கள்.

தடத்த நிலையில் இறைவன் சொருப நிலையை விட்டு ஆன்மாக்கள் உய்தற் பொருட்டு அருள் வழங்க நம்மிடம் வந்துள்ளார். அவர் நமக்கு அருள் வழங்கி நம்மை ஈடேற்றவே எம்மை நோக்கி வந்துள்ளார். ஆனால் நாம் அவரை நோக்கிச் செல்லாமல் இருப்பது ஆணவ இருளின் இயல்பான குணங்களேயாகும். மாயை எம்மைப் பீடித்திருப்பதால் அதிலிருந்து விடுபடுதல் எம்மவர்க்குமிகவும் இயலாததொரு காரியமாகும். தடத்த நிலையில் இறைவனுக்கு நாம் பல பெயர்களை இட்டு அவரை அழைக் கிறோம். சிவன், முதல்வன், இறைவன் முதலிய சில ஆண்பாற் பெயர்கள் இவ்வாறு இடப்பட்டு அழைக்கப் படுகின்றார். சக்தியோடு சிவன் சேர்ந்திருக்கும் போது இறைவனின் ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகியவற்றைச் செய்கின்றார். தனு, கரண, புவன, போகங்களை இறைவனே ஆன்மாக்கள் பொருட்டுப் படைத்தார். முதற் காரணமாகிய மாயையிலிருந்தே இவை படைக்கப்பட்டன. அவ்வாறு படைத்தவற்றை நிலை நிறுத்துவதற்குச் செய்யப்பட்ட செயலே காத்தலாகும். உயிர்களை இன்பதுன்பங்களுள் திளைக்கச் செய்தலே மறைத்தலாகும். பாசத்தை நீக்கிச் சிவத்தைத் தெரிய வைக்கும் செயலே அருளல் எனப்படும். தனு, கரண, புவன, போகங்களை ஒடுக்கும் செயல் அழித்தலாகும். இவை யாவுமே மாயா காரணத்தால் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டவையாகும். உயிர்கள் முற்பிறப்பிற் செய்த பாவ புண்ணியங்களின் அடிப்படையில் இப் பூவுலகில் இன்ப துன்பங்களை அனுபவித்துப் பின் அவற்றிலிருந்து நீங்கிச்சிவத்தோடு இரண்டறக்கலக் கின்ற நிலைவரை (முத்தி நிலை) இறைவன் செய்யும் திருவிளை யாடலே.

இறைவன் அத்துவித நிலையில் உயிர்களோடு இரண்டறக் கலந்துள்ளார். உப்பு நீர் போல (உப்பு+நீர்) என இரண்டுபட்ட பொருளே ஒரு பொருள் போல நமக்குத் தோற்றமளிக்கின்றது. சிவன் சக்தியோடு இரண்டறக்கலந்துள்ள நிலை "தீயில் வெப்பம்போல்" எனச் சைவசித்தாந்தம் கூறும் தடத்த நிலையில் இறைவன் பல குணவியல்புகள் உடையவர் எனச் சித்தாந்தம் கூறும் இறைவன் எண்

புகழ்ச்சி எப்போதும் இனிமையானது.

குணத்தான் என்கிறது சைவசித்தாந்தம். இறைவன் முற்றுமுணர்ந்தவன்.

நாம் செய்த வினைகளைத் தொலைப்பதற்காகவே பிறவி எடுத்துள்ளோம். ஆணவமலம் அநாதியானது. உயிர்கள் எப்பிறவி எடுத்தாலும் ஆணவம் உயிர்களோடு இரண்டறக்கலந்துள்ளது. எனவேதான் அதை நீக்க இறைவன் நமக்குப் பிறவிகளைக் கொடுத்து வருகிறார். அவற்றுள் மானுடப்பிறவி மகத்தான பிறவி என ஆன்றோர் கூறுவர். இறைவனை அடைவதற்கு இது ஒன்றே நற் பிறவியாகும். நாம் செய்துவரும் தீவினைகள் யாவும் ஆணவத்தின் இயல்பாற் செய்யப்படுபவை. நல்வினைகள் யாவும் ஆணவத்தை அடக்கிச் செய்வன. வினை தொலைத்தல் மிக முக்கியமான விடயம். வினைகளைத் தொலைக்கவே ஆன்மாக்கள் பிறவி எடுக்கின்றன. மனிதப் பிறவிக்கு மேல் பதவியாக தேவர்,முனிவர் முதலிய பிறவிகளும் உண்டு. கீழ் பண்புள்ள பிறவிகளாக மிருகம், பறவைகள் போன்ற பிறவிகளையும் நாம் எடுக்க முடியும். ஆனால் மனிதப் பிறவி பகுத்தறிவுடைய பிறவியாகும். இறைவனை இப்பகுத்தறிவினால் உணர முடியும். மனிதரிடம் தெய்வப் பண்பு மிருகப் பண்பு ஆகிய இரு பண்புகள் உள்ளன. ஒருவரைப் பார்த்து அவர் தெய்வம் போல விளங்குவதாகவும், அல்லது மிருகம் போல இருப்பதாகவும் நாம் கூறிவருவது இது கருதியன்றல்லவா. ஆணவம் நீங்கிய நற்செயல்கள் செய்யின் அவை தெய்வப் பண்பின் பாற்படும். ஆணவத்தோடு கூடிய தீய செயல்கள் செய்யின் அவை மிருக குணத்தின் செயல்களாக அமையும்.

திருவருட் கடலில் மிதந்து நிற்கும் நாம் ஆணவ இருளினால் திருவருட் சக்தியைப் பற்றி உணர முடியாத நிலையில் வாழ்கின்றோம். அன்பு செய்து ஆணவத்தை வெல்ல முடியும். இறைவன் மேல் அன்பு வைத்தல் ஆணவத்தை அடக்குவதன் மூலமார்க்கமாகும்.

கர்ம வினைகளை நல்வினை, தீவினை என இருவகைப்படுத்தலாம். இறைவன் சம்பந்தப்பட்ட தீவினை சிவத்துரோகம் எனப்படும். ஏனைய உயிர்கள் சம்பந்தப்பட்ட தீவினை பசுத்தீவினை எனப்படும். எமது விதியை நாமே தெரிந்து வைத்திருக்கிறோம். முன் செய்த ஊழாற் கிடைத்த இவ் விதியையும் எம் மதியினால் வெல்ல முடியும். ஊழானது தனது பணியினை மேற்கொண்டு வரும் வேளையில் நாம் இப்பிறவியில் நல்லனவற்றைச் செய்தால் அதற்குரிய பலனை நாம் அனுபவிக்கலாம். அதன்மூலம் பழைய ஊழ்வினை குறைவடைந்து நமக்கு வெற்றி கிடைக்கும். ஆகவே நாம் இதற்காக முயற்சி செய்தல் வேண்டும்.

உலகம் தோன்றியதற்குரிய முதற்காரணம் மாயையாகும். துணைக் காரணமாக நிற்பது சிவசக்தியாகும். நிமித்த காரணமாய் நிற்பவர் இறைவன். மாயையால் தோன்றிய

உலகம் அழியும் போது அது மாயையாலேயே அழியும். இறைவன் தானே தோற்றுவித்துப் பின்னர்த் தானே ஒடுக்குதல் ஆகிய செயல் இதுவேயாகும். முத்தி நிலையில் மாயை உயிரை விட்டு நீங்கும். அதுவரை அது உயிரைப் பீடித்து நிற்கும். மாயையின் தோற்றத்தால் நாம் எல்லோரும் இவ்வாறே பிறவி எடுத்துவிட்டோம். மாயா சக்தியால் உலகம் தோன்றியது உண்மைதான். இந்த மாயை தொலையுமட்டும் நாம் பிறவி எடுத்தல் தவிர்க்க முடியாதது.

## பரிவுடனே எமையெல்லாம் வாழ வைப்பாய்

பார்முழுதும் அனர்த்தங்கள் இயற்கைச் சீற்றம்
பட்டதுயர் கொஞ்சமல்ல என்றும் ஏக்கம்
யார்செய்த பாவத்தால் நேர்ந்த திந்த
அநியாயம் இதற்குஒரு முடிவு இல்லை
கார்வண்ணன் எமைக்காக்க வருவான் என்று
காலமெல்லாம் காத்திருந்தோம் கனவு தானோ
பார்த்திபஆண் டேவந்து இன்பம் தந்து
பரிவுடனே எமையெல்லாம் வாழ வைப்பாய்

கவிஞர் வ. யோகானந்தசிவம்.

## "திருவருள் தரும் அருள்மொழிகள்"

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்" - சம்பந்தர்
"கொள்கையினால் உயர்ந்த நிறையுடையார்
இடர்களைவாய்" - சம்பந்தர்
"செய்வினை வந்து எம்மைத் தீண்டப்பெறாது" - சம்பந்தர்
"ஆசை கெடுப்பது நீறு" - சம்பந்தர்
"கோளும் நாளும் அடியாரைவந்து நலியாத வண்ணம்
உரை செய்" - சம்பந்தர்
"கேதீச்சரம் கைதொழக் கடுவினையடையாவே" - சம்பந்தர்
"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்நெறிக்குய்ப்பது" - சம்பந்தர்

உ

# "அன்னம் அளிக்கும் சந்நிதியான் ஆச்சிரமம்"

*திரு சி. நந்தகுமார் அவர்கள்*

அன்னதானக்கந்தன் வீற்றிருக்கும் செல்வச்சந்நிதி ஆலயச் சூழலிற் கற்பக விருட்சமாய் விளங்கும் சந்நிதியான் ஆச்சிரமம் பல பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிறது. அப்பணிகளுக்கெல்லாம் மணிமகுடமாகத் திகழ்வது அன்னதானப் பணியாகும்.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி

வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும். அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளை தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு

வந்த விருந்தினரைப் போற்றி இனிவரும் விருந்தினரை எதிர் பார்த்திருப்பவன் வானுலகத்தில் உள்ள தேவர்க்கும் நல்ல விருந்தினனாவான். "தனியொருவனுக்கு உணவில்லையேல் ஜெகத்தினையே அழித்திடுவேன்" என்றார் பாரதியார். தர்மம் தலை காக்கும் என்பது அனைவரது உள்ளத்திலும் ஒலிக்க வேண்டிய முதுமொழி.

அகிலத்திலே சிறந்ததானம் அன்னதானம்
கர்மதோஷத்தைப் போக்கச் சிறந்தவழி அன்னதானம்

அன்னதானம் என்பது தியாகத்தின் அடிப்படையில் அமைந்தது.

அன்னதானம் என்கின்ற பொழுது நினைவுக்கு வருவது செல்வச்சந்நிதி. இங்கு வரும் அடியவர்கள் உணவு உண்ணாமற் செல்லும் வழக்கம் இல்லை. செல்வச் சந்நிதிச் சூழலில் அன்னதானம் சிறப்பாக நடைபெறுவதால், செல்வச் சந்நிதிக் கந்தன் "அன்னதானக் கந்தன்" என்று நாமம் பெறுகிறார். அன்னதானக்கந்தன் அளிக்கும் அன்னமானது ஞானத்தையும் வைராக்கியத்தையும் வழங்குகிறது. அதன் பலன் அளவற்றது மட்டுமன்றி ஆனந்தத்தையும் தரவல்லது. முன்னர், செல்வச்சந்நிதி ஆலயத்தைச் சுற்றி ஐம்பது மடங்கள்வரை இருந்தன

என்பதற்குச் சான்றுகள் உண்டு. ஆனால் இன்று சில மடங்களே தமது பணிகளைச் செய்து வருகின்றன. சந்நிதியான் ஆச்சிரமம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துச், "சோறு மணக்குது சந்நிதி சூழலிலே" என்பதற்கேற்பவும் "அன்னதானக் கந்தன்" என்று வழங்கப்படும் வழமைக்கு எவ்வித குறைச்சலுமின்றி அடியவர்களின் பசிப்பிணி போக்கி வருகிறது. சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் அன்னதானப் பணியைப் பார்த்தால் பிரமிப்பு ஏற்படும். சந்நிதியான் ஆச்சிரமம் அன்னதானம் என்ற தெய்வீக வழிபாட்டைச் செல்வச் சந்நிதிக்கந்தனின் மாபெரும் கட்டளையாக ஏற்று மெய்யடியார் களுக்கு நடாத்திவருவது பாராட்டுக் குரியது.

எங்கெல்லாம் அன்னதானப் பணிகள் நிகழ்கின்றனவோ அவற்றிற் கெல்லாம் சிறந்த எடுத்துக்காட்டாகச் சந்நிதியான் ஆச்சிரம அன்னதானப் பணி சிறந்து விளங்குகிறது. ஆச்சிர மத்தில் அன்னதானப்பணி நிகழ்கின்ற பொழுது அமைதிச்சூழல், ஒழுங்கு, பக்தி என்பன ஏற்படுகின்றன. அறுசுவை உணவைக் கொட்டாமல் சிந்தாமல் அளவாகத், திருப்தியாக முருகனடியவர்களுக்கு அன்பாகப் பரிமாறும் நிகழ்வைப் பார்க்கும்போது மெய்சிலிர்க்கும். இவ்வன்னதானம் முருகனடியவர்களின் வயிற்றையும், உள்ளத்தையும் குளிர்வித்துப் பூரண ஆனந்தத்தை தரவல்லது. இவற்றுக் கெல்லாம் காரணம் மிகுந்த ஆளுமை யுடன் இறைபக்தியுடன் அன்னதானப் பணியை நல்வழிப்படுத்துகின்ற சுவாமிகளும், அவர்தம் அன்பர்களும்.

சந்நிதியான் ஆச்சிரமத்து அன்னதானப் பணிகளுக்குப் பல முருக அன்பர்கள் நிறைந்த உதவிகள் புரிந்து வருகின்றனர்.

புனித நாட்களிலும், நமது முன்னோர்களின் நினைவாகவும், பிறந்தநாள் வைபவங்கள், திருமண நாட்கள் என்பவற்றுக்கும் ஆச்சிரமத்து அன்னதானப் பணிகளுக்கு நாங்கள் உதவி செய்யலாம்.

கர்மதோஷத்தைப் போக்கு வதும், சிறந்த தானமாகிய அன்னதானப் பணியைச் சிறப்பாகச் செய்யும் சந்நிதியான் அன்னதானப் பணிகள் சிறப்பாக ஓங்கி வளரட்டும்.

## வறுமையின் கொடுமை

தரித்திரமானது மனிதனுடைய வாழ்வை அடியோடு கெடுத்துவிடும். வடிவு, தனம், மனம், குணம், குடி, குலம் முதலிய யாவும் வறுமையால் அடியோடு அழியும்

வறுமையால் நல்ல சுகங்களை துய்த்தற்கு இன்மையால் இம்மை நலனும் தருமம் செய்ய முடியாமையால் மறுமை நலனும் இன்றி வறுமையாளன் வாடுவான்.

(தொடர்ச்சி...

உ



# அருணகிரி சுவாமிகள் அருளிய
# கந்தரலங்காரம்

பண்டிதர் சி. வேலாயுதம் அவர்கள்

## கால பாசத்தினின்றும் விடுதலை செய்

நீர்க்குமி ழிக்கு நிகரென்பர் யாக்கைநில் லாதுசெல்வம்
பார்க்கு மிடத்தந்த மின்போது மென்பர் பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட வென்னினெங் கேனு மெழுந்திருப்பார்
வேற்கு மரற்கன் பிலாதவர் ஞான மிகவுநன்றே.

இவ்வுடம்பானது நீரில் எழுகின்ற குமிழிக்கு ஒப்பாகும் என்று பெரியோர் கூறுவர். பொருட் செல்வமானது நிலைபெற்று இருக்காது. ஆராய்ந்து பார்த்தால் ஆகாயத்திற் தோன்றும் அந்த மின்னலைப் போன்று கணப் பொழுது தோன்றி மறையும். மிகவும் பசியால் வாடிவந்து ஐயா, அன்னம் தாருங்கள் என்று இரப்பவர்களுக்கு ஏதாவது கொடுக்கவேண்டும் என்று எங்காயினும் எழுந்து போய்விடுவார்கள். வேலாயுதங் கொண்ட முருகனிடம் பத்தி இல்லாதவர் அறிவு உண்மை அறிவாகமாட்டாது.

## திருவடி பணியக் கற்றிலேன்

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற்றி லேன்மத கும்பகம்பத்
தறுகட் கிறுகட் சங்க்ராம சயில சரசவல்லி
இறுகத் தழுவும் கடகா சலான் னிருபுயனே.

மதநீர் ஒழுகப்பெற்ற குடம் போன்று மத்தகத்தையுடையதும், அசையும் இயல்பினையுடையதுமாகிய அஞ்சாமையையும் சிறிய கண்களையும் கொண்ட யானையை உடைய போர் வீரனே! மலைகளையுடைய குறிஞ்சி நிலத்தில் வளர்ந்த இனிய குணம் வாய்ந்த வல்லிக் கொடி போன்ற வள்ளி நாயகியார் கெட்டியாகத் தழுவிக் கொள்கின்ற கடகம் என்ற வளையலைத் தரித்த மலைபோலும் பன்னிரு தோளுடைய முருகக் கடவுளே! பெறுவதற்கு அருமையான மானிடப் பிறவியை அடைந்திருந்தும் உமது சிறிய திருவடியை நெருங்கி வணங்கிப் பெரிய வீடுபேற்றை அடைவதற்குக் கற்றேனில்லை. என்னே? என் மதியீனம்.

## முருகனிடம் மனம் கொண்டவர்க்கு பரமுத்தி கிடைக்கும்.

சாடும் சமரத் தனிவேள் முருகன் சரணத்திலே
ஓடுங் கருத்தை யிருத்தவல் லார்க்குகம்போய் சகம்போய்
பாடுங் கவுரி பவுரி கொண்டாடப் பசுபதி நின்
றாடும் பொழுது பரமாயிருக்கு மதீதத்திலே.

அறநெறிக்கு மாறுபட்டவரையும் கொடிய வினைகளையும் அழித்துப் போர் செய்யவல்லதாகிய ஒப்பற்ற வேலாயுதத்தையுடைய முருகப் பெருமானின் திருவடிக் கமலங்களிலே பல்வேறு வழிகளில் ஓடித்திரிகின்ற மனதை நிலை பெறச் செய்யும் மனத்தையுடையவர்களுக்கு நான்கு யுகங்களும் முடிந்து, உலகமெல்லாம் அழிந்து பாடும் வன்மையுடைய உமையவள் பவுக்கூத்தை ஆடவும், ஜீவான்மாக்களுக்கும் தலைவனாகிய சிவபெருமான் நிலைத்து நின்று ஆனந்தத் தாண்டவம் செய்யும் போது தத்துவ அதீதத்தில் முருகனின் திருவடியில் வைத்த கருத்து அழியாமல் மேலானதாக இன்புற்று விளங்கும்.

## முருகன் அருள் பெற்றால் இயமபயம் இல்லை

தந்தைக்கு முன்னந் தனிஞான வாளொன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி யெனைத்தேற் றியபின்னர்க் காலன் வெம்பி
வந்திப் பொழுதென்னை என்செய்ய லாஞ்சத்தி வாளொன்றினாற்
சிந்தத் துணிப்பன் தனிப்பருங் கோபத்ரி சூலத்தையே.

முன்னாளிலே தந்தையாகிய சிவபெருமானுக்கு ஒப்பற்ற ஞானமாகிய வாளாயுதம் ஒன்றினை உபதேசித்த ஆறுமுகக்கடவுள் அடியேனை அவ்வுபதேசத்தால் தெளிவித்த பின்பு இயமன் கோபங்கொண்டு வந்து இப்போது என்னை என்ன செய்ய முடியும். அந்தக் குருநாதன் அருளால் நான் பெற்ற ஞானசக்தியாகிய வாள் ஒன்றினால் சிதறுமாறு அடக்குவதற்கு அருமையான சீற்றத்தையுடைய அவனது கையில் உள்ள முத்தலைச் சூலத்தை துண்டாக்கி விடுவேன்.

வாள் என்பது ஞானம். (கூர்ந்த மெஞ்ஞானம்) சிவனுக்கு உபதேசித்த அவன் எனக்கும் உபதேசித்துள்ளான்.

(தொடரும்...

உ

# தூய்மையான வாழ்வுக்குத் துணைவரும் துளசி வழிபாடு

*மதுரகவி காரை எம். பி. அருளானந்தன் அவர்கள்*

இந்துக்களுடைய வழிபாட்டு முறைகள் பல. அவற்றில் துளசி வழிபாடு முக்கியமான ஒரு இடத்தை வகிக்கின்றது. "துளசியை நாங்கள் காப்பாற்றினால் துளசி எங்களைக் காப்பாற்றும்". துளசிக்கு ஆன்மீகப் பெருமையுண்டு. திருமாலின் திரு மார்பை அலங்கரிக்கும் புனிதம் அதற்கு உண்டு. மண்ணில் மங்கைய ரால் மாடத்தில் வைத்துப் பூசிக்கப் படும் செடியாக அது விளங்குகிறது. குழந்தை முதல் பெரியோர் வரையில் அதை மருந்திற்காகவும் பயன்படுத்து கிறார்கள். பெருமாள் கோயிலிலும், ஆஞ்சநேயர் சந்நிதியிலும் துளசி தளத்தைப் பிரசாதமாகக் கொடுப்பார் கள். பிரசாதமாக அளிக்கப்படும் எந்த இலை, பூவிற்கும் இந்தத் தனிப் பெருமை கிடையாது. துளசியின்றித் திருமாலுக்குச் செய்யும் ஆராதனை நெய்யில்லாத உணவைப் போன்றது என்று ஆன்றோர் கூறுவார்கள்.

மகாலட்சுமியின் சொருபமான துளசி இருக்கும் இடத்தில் மகா விஷ்ணு எப்பொழுதும் வாசம் செய்கிறார். துளசியினால் பூசித்தால் ஆயிரம் பாற்குடங்களினால் அபிஷே கம் செய்த திருப்தியை ஸ்ரீ மகா விஷ்ணு அடைகிறார். மகா விஷ்ணு விற்குப் பிரியமான புஷ்பமாக விளங் கும் துளசித்தளம், சிவபெருமானின் பூசைக்கும் ஏற்றது. எடுத்து வைத்த துளசி மூன்று நாளைக்குப் பூஜை செய்ய உபயோகப்படும். இவ்வாறு மகிமை வாய்ந்த துளசியை நம் வீடு களில் அழகிய மாடங்களில் வளர்த் துச் சிரத்தையுடன் பூசை செய்வது சிறப்பு. பெண்கள் அனுதினமும்

"ப்ருந்தா, ப்ருந்தாவன்,
விச்வ, பூஜிதா, விச்வ பாவனீ!
புஷ்பஸாரா, நந்தனீச,
துளஸீ, க்ருஷ்ண ஜீவனீ
ஏதத் நாமாஷ்டகம் சைவ
ஸ்தோத்தும் நாமார்த்த ஸம்யுதம்!
ய; படேத் தாம்ச ஸம்பூஜ்ய
ஸோச்வமேத பலம் லபேத்".

என்ற சுலோகத்தைச் சொல்லி வழிபட்டு வந்தால் நல்ல கணவரை அடைவர். தீர்க்க சௌமாங்கல்யமும், சௌபாக்கியங்களும் பெருகும்.

கண்ணன் எடைக்கு நிகராகத் துளசித்தளத்தைத் துலாபாரத்தில் வைத்து, ருக்குமணி, சத்தியபாமாவை வென்றாள் என்று புராணக் கதைகள் கூறுகின்றன. அப்படியானால் அதுவே பக்தியின் பிரத்தியட்ச சொரூபம் அல்லவா?.

ஒரு சமயம் மகா விஷ்ணுவே துளசியை மகிழ்விப்பதற்காக அவளை உருவகித்துப் பூஜை செய்தார் என்று ஹரிவம்சம் எனும் நூல் கூறுகிறது. இந்துக்கள் செய்யும் எந்தப் பூசையிலும் துளசி முக்கிய அங்கம் வகிக்கின்றது. துளசியும், சந்தனமும் மங்களகரமான பூசைப் பொருட்களாகக் கருதப்படுகின்றன.

ஏகாதசி உபவாசம் இருப்பவர்கள் மறுநாள் துவாதசியன்று துளசித்தளமும், புனித தீர்த்தமும் அருந்தி உபவாசத்தை முடிப்பதைப் புண்ணியமாகக் கருதுகிறார்கள். துளசியில் பத்து வகைகள் இருப்பதாக ஆங்கிலேய ஆராய்ச்சி நிபுணர் அர்வின் எர்னஸ்ட் கூறுகிறார். துளசியின் மருத்துவக் குணங்கள் எண்ணில் அடங்காதவை. துளசி இலைகளைத் தினந்தோறும் மென்று தின்றால் நோயற்றவர்களாக இருக்க முடியும் என்று கூறப்படுகின்றது.

ஆயுள் வேத மருத்துவர் நோய்க்குத் தக்கவாறு சரியாக உட்கொள்ளும் அளவைத் தீர்மானிப்பர். எல்லா மூலிகை மருத்துவம் போலவே துளசி மருத்துவத்திலும் வியாதி குணமாவதற்குக் குறித்த நாட்கள் ஆகும். இதனைத் தினசரி மாத்திரைகள் விழுங்குவதுடன் ஒப்பிட்டுப்பார்ப்பது பொருத்தமாகாது.

அர்வின் எர்னஸ்ட் தனது சிகிச்சை முறைகள் என்ற நூலில் கீழ்க்கண்ட சில விசேட சிகிச்சைகள் பற்றி விளக்கியுள்ளார். தினந்தோறும் அதிகாலையில் வெறும் வயிற்றில் பத்துத் துளசி இலைகளை மென்று தின்பதாலும், ஒன்றரைத் தேக்கரண்டி துளசி இலைச்சாற்றை அருந்துவதாலும் இரத்தம் சுத்திகரிக்கப்படும். மார்புவலி, தொண்டை வலி, வயிற்று வலி ஆகிய கோளாறுகளில் இருந்து காப்பாற்றும்.

கட்பார்வை குன்றிய நிலையில் உள்ள முதியவர்கள், கண்களில் நேரடியாக இரண்டு சொட்டுத் துளசிச்சாற்றை விட்டு வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

தினந்தோறும் காலையில் பத்துத் துளசி இலைகளை மென்று ஒரு டம்ளர் நீர் அருந்தினால் மாதவிடாய் கோளாறுகள் நீங்கும். தினந்தோறும் முப்பது மில்லி துளசி இலைச்சாற்றைப் பருகினால் சில பெண்களுக்கு மாதவிடாயின்போது ஏற்படும் கடுமையான வலியில் இருந்து நிரந்தர நிவாரணம் கிடைக்கும்.

காது வலி, தீராத வயிற்றுப் போக்கு, மலச்சிக்கல், சிறுநீரகக் கோளாறுகள் போன்றவற்றிற்கும் துளசி நிவாரணம் அளிக்கவல்லது. துளசி இலைகளைக்கொண்டு தயாரிக்கப்படும் கஷாயம் வாய்த்துர் நாற்றத்தையும், மற்றும் பால் வினை

நோய்களையும் முறிக்கப்பயன் படுத்தலாம்.

இவ்வாறாகத் துளசியை வைத்துப் பேணப்படுகின்ற இடமும் புனிதமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். ஆசௌசம் உடையவர்கள் துளசி மரத்தில் இலைகளை பிடுங்கவோ அல்லது துளசி வழிபாட்டை மேற் கொள்ளவோ ஆகாது.

துளசி மாடத்தில் தீபங்களை ஏற்றி மலர்களை வைத்துத் தினந் தோறும் வழிபாடு செய்பவர்களுடைய வாழ்வில் மகாலட்சுமியினுடைய பூரண கடாட்சம் சேரும். குறிப்பாக ஏகாதசி, கிருஸ்ண ஜெயந்தி போன்ற புனித நாட்களில் ஆவது அத்தியாவசிய மாகத் துளசியை வழிபடல் வேண்டும்.

இன்னொரு வகையாகத் துளசி காவற்சக்தியாகவும் விளங்கு கின்றது. துளசியைப் பற்றிய அழகான, சுவையான கதையினைத் தேவி பாகவதத்தில் அறிந்துகொள்ள முடிகிறது.

வழிபாட்டிற்காகவும், வாழ்வில் வேண்டும் மங்கள சௌபாக்கியத்திற் காகவும், நோயற்ற வாழ்விற்காகவும் துளசி வழிபாட்டை மேற்கொண்டு மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

## இறையருள் எப்போது கிட்டும்?

இறைவனை அடைவதற்காக யாருடைய பிராணனாவது துடிக்குமானால் அவர் இறையனுபூதிபெற அவ்வளவு தாமதமில்லை என்று தெரிந்து கொள்ளலாம். ஒருவன் குருவிடம் 'சுவாமி இறையருளை எப்படிப் பெறுவது? என்பதை எனக்குக் கூறுங்கள்' என்றான். அதற்கு குரு 'வா, காட்டுகிறேன்' என்று கூறி சீடனை ஒரு குளத்திற்கு அழைத்துச் சென்றார். இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். திடீரென்று குரு சீடனின் தலையைத் தண்ணீரில் அமிழ்த்திப்பிடித்துக் கொண்டார். சிறிது நேரத்திற்குப் பிறகு கையை விட்டார். சீடன் பரிதவித்துப்போய் தலையை மேலே தூக்கினான்.

உடனே குரு சீடனைப்பார்த்து "எப்படி இருந்தது?" என்று கேட்டார். அதற்கு சீடன், சுவாமி உயிரே போவது போல் இருந்தது. பிராணன் கிடந்து துடித்தது என்றான்.

இதைக்கேட்ட குரு, எப்போது இறைவனுக்காக உன் உயிர் இப்படித் துடிக்குமோ, அப்போது நீ இறையனுபூதி பெறுவாய். அதற்காக இப்போதிருந்தே இறைவனை சிந்தையில் நினைத்து தியானத்தில் ஈடுபடு என்றார்.

*-ஸ்ரீ ராமகிருஸ்ணபரமஹம்சர்-*

உடலுக்கு உடற்பயிற்சி போன்றதே மனிதனுக்குப் படிப்பதும்.

(தொடர்ச்சி..

உ

# வந்திப்பார் மதுரக்கனி

*திரு முருகவே பரமநாதன் அவர்கள்*

திரிகூடராசப்பக்கவிராஜர் காட்டும் கனியை இனிக் காண்போம்.

ஈயறியாப் பூந்தேனே எழுத்தறியா மறைப்பொருளே
காயறியாச் செழுங்கனியே கற்பகத்தின் பசுங்கொழுந்தே
தாயறியாக் கருவி லிருந்து அமுதூட்டும் தாய்த்துணையே
நீயறியாச் செயலுண் டோ நிகிலபரம் பரமமூர்த்தி

இப்பாடலின் அமைப்பை நாம் கூர்ந்து நோக்கல் வேண்டும். இறைவனைத் தேன் என்றார். ஈ எச்சிற் படுத்தாத தேன் என்கிறார். எழுதாக் கிளவி வேதம். எழுத்திலடங்காத இறைவன் மறை (வேதம்) யின் உட் பொருளாயும் திகழ்கின்றான். ஒரு கனிக்கு வரலாறே உண்டு. மகரந்தச் சேர்க்கையால் அது பிஞ்சாகி, காயாகி, முற்றிக்கனியாகிறது. இறைவனுக்கோ அந்த நிலையொன்றும் இல்லை என்பதை காயறியாச் செழுங்கனி யென்ற தொடர் விளக்குகிறது. எல்லாப் பழங்களும் அவன் கைவண்ணத்தில் வந்தனவே. எனவே கனியும் அவனே. சுவையும் அவனே. பழத்தின் சுவையாய் நின்றாய் போற்றி என்கிறார் அப்பர். அடுத்து வருவது கற்பகத்தின் பைந்துளிராய் அமைவது. மாந்தளிர் பெண்களின் மேனிக்கு உவமானம் ஆவதுண்டு. (முறிமேனி முத்தம் முறுவல்- வள்ளுவர்- முறி- மாந்தளிர்) இறைவனோ கற்பகத்தின் பசுந்துணை ராய்க் காட்சி தருகிறார். புலவருக்கு வேண்டியதைக் கொடுப்பது கற்பக தரு. இறைவனும் அப்படியானவனே என்பதைக் காரணி கற்பகம் கற்றவர் நற்றுணை - எனத் (திருக்கோவை யாரில்) திருவாதவூரர் பாடுகின்றார். இப்பாடல் ஒரு அபூர்வமான படைப்பு காயறியாக் கனிதான் இறைவன். நாம் முயன்றால் அக்கனியை சுவைக்கலாம் என்பதே உண்மை.

அருளாளர்களின் நாவிலே தவழ்கின்ற சொற்களெல்லாம் அர்த்தம் நிறைந்தவை என்பதை வள்ளலார் வாக்கிலும் காணலாம். இறைவனை அருட்கனியாகக் காட்டும் வள்ளலார் திறன் விழுமியம் நிறைந்தது.

அருள் பழுத்த செழுங்கனியே! அகம் பழுத்த
சிவஞான அமுதே! முத்திப்
பொருள் பழுத்த அருட்பாவை எமக்களித்த
தெய்வமணப் பூவே! என்றும்

மருள் பழுத்த அடியேங்கள் மனஇருள்
அகற்ற வரு மணியே! மெய்ம்மைத்
தெருள் பழுத்த வடலூர் வாழ் இராமலிங்க!
நின்னருளைச் சிந்திப் பேனே.

அருட்பா - சற்குருவணக்கம்

இறைவன் திருப்பாதம் தேனென மதுரிக்கும் பதம் என்று பாடும் போது பாடலே மதுரிக்கிறது அல்லவா? வள்ளலாரின் பக்தி வைராக்கிய விரத மகத்துவம் பேசுகிறது. இனிவரும் அருட்பா

கண்ணுள் மாமணியே அருட் கரும்பே
கற்ற நெஞ்சகம் கனிந்திடும் கனியே
எண்ணுள் உட்படா இன்பமே என்றென்
றெந்தை நின்றனை ஏத்துவன் எனினும்
மண்ணுள் மற்றியான் வழிவழி அடியேன்
மாய மன்றிதுன் மனம் அறிந்ததுவே
திண்ணம் ஈந்தருள் ஒற்றியூர் அரசே
தில்லை அம்பலம் திகழ் ஒளிவிளக்கே

அருட்பா - இரண்டாந்திருமுறை வழிமொழி விண்ணப்பம்

வள்ளலார் தனது இறையனுபவத்தை அனுபவித்தார். அதனாற் கிடைத்த இடையீடற்ற அனுபவமும் கிடைத்தது. அந்நிலை தன்னை விட்டுப் போய்விடுமோ என்ற எண்ணம் அவரை வாட்டும் பாவம் மிக்கு நிற்க. இந்நிலை நிறைவேறுமோ, கைக்கு எட்டியது வாய்க்கு ஏட்டாமற் போய் விடுமோ என்ற அங்கலாய்ப்புச் சொட்டப் பாடுகின்றார்.

களங்கமறப் பொது நடம்நான் கண்டுகொண்டதருணம்
கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்ததொரு -காய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ வெம்பிஉதிர்ந் திடுமோ
வெம்பாது பழுக்கினும்என் கரத்தில் அகப்படுமோ
கொளக்கருது மலமாயைக் குரங்குகவர்ந் திடுமோ
குரங்குகவ ராதெனது குறிப்பில் அகப் படினும்
துளக்கம் அற உண்ணுவனோ தொண்டைவிக்கிக்- கொளுமோ
ஜோதிதிரு உளம்எதுவோ ஏதும் அறிந்திலனே.

அத்துவித ஆனந்த அனுபவ இடையீடு

எவ்வித இடையீடும் இன்றி அந்த ஆடற்பெருமானின் நடனத்தை நான் கண்டு, அனுபவித்து ஆனந்தித்த வேளை, என் மனத்திலே அரும்பிய பூ, பிஞ்சாகிக், காய்த்து விளைவு எய்தியபோது -அந்தக்காய் உரிய

▶▶ தவறு செய்து திருந்துபவன் தன்னைக் கடவுளிடமே ஒப்படைத்து விடுகிறான். ◀◀

வேளை கண்டு பழமாகுமோ அல்லாமல் இடையில் வெம்பிப் பழுத்து உதிர்ந்துதான் போகுமோ அன்றி, காய் பழுத்துப் பறிக்க வாய்ப்பு வந்து சேருமோ. கைக்கு வந்தாலும் அதை என் மாயையென்கின்ற குரங்கு, என்னிடம் இருந்து பறித்துக் கொண்டு ஓடிவிடுமோ. இல்லை என் கைக்கு அகப்பட்டாலும் - உண்ணக் கிடைக்குமோ. உண்ணும் போது தொண்டை விக்குமோ. ஏதும் அறியேனே என இறைவனிடம் கேட்கும் வள்ளலாரின் மனோநிலையை நாம் எப்படி உரசிப் பார்ப்பது.

இது வரை மதுரக் கனியாய்த் தித்திக்கும் இறையனுபவப் பெருமையையும் அதையடைய எடுக்கும் முயற்சியையும், அடைந்தாலும் உண்ணக்கிடைக்குமோ என்ற ஏக்கத்தையும் பார்த்தோம். நமது சமுதாயத்தோடு இனிமையாய்க் கதைத்து வாழவேண்டும். அப்பாலே கனிந்த உள்ளம் இறையனுபவம் காணும் என்பதையும் பார்த்தோம் இப் பெரியார்கள் தந்த அநுபூதி நிலைவழி நம்மையும் வழிநடாத்தி வாழ்வில் வெற்றி காண்போமாக.

மனிதர் காளிங்கே வம் மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனி தன் பொற்கழல் ஈசனெனுங் கனி
இனிது சாலவு மேசற் றவர் கட்கே
அப்பர் பெருமான் 5;91,7

ஒன்று கண்டேனிவ் வுலகுக் கொருகனி
நன்று கண்டாயது நமச்சிவாயக் கனி
மென்று கண்டாலது மெத் தென்றிருக்குந்
தின்று கண்டாலது தித்திக்கும் தானன்றே
திருமந்திரம் 2649

ஒன்று கண்டீர் உலகுக் கொரு தெய்வமும்
ஒன்று கண்டீர் உலகுக் குயிராவதும்
நன்று கண்டீர் இனி நமச்சிவாயப் பழந்
தின்று கண்டேற் கிது தித்தித்த வாறன்றோ
மேலது 2922

எனவேதான் வள்ளலாரும் இறைவனது திருப்பாதங்களை "ஏற்றமுக் கனி, பாகு கன்னல், கற்கண்டு, தேனென்ன மதுரிக்கும் பதம்" எனப் போற்றிப் புகழ்கிறார்.

(முற்றும்)

உ

# ஆட்கொண்ட போது

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

திருமூலரின் திருமந்திரம் தத்துவங்களை அற்புதமாக விளக்கும் பொக்கிஷமாகும்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்.

என்று அன்பையே இறைவனாகக் கண்டவர் திருமூலர். "அன்பு வேறு, இறைவன் வேறு" என்பவர்கள் அறிவற்றவர்கள் என்பது அவரது முடிவு. திருவடிப்பேறுபற்றி திருமந்திரத்திலே அவர் சிறப்பாக விளக்கும் போதும் இதையே அவர் வலியுறுத்தியுள்ளார்.

இசைத்தெழும் அன்பில் எழுந்த படியே
பசைந்திடும் ஈசரைப் பாசத்துள் ஏகச்
சிவந்த குருவந்து சென்னிகை வைக்க
உவந்த குருபதம் உள்வந்து உவந்தே.

என்று திருவடிப்பேறு பற்றி பாடத்தொடங்கும் போதே அன்பிலே எழும் ஈசனை அன்பினால் வழிபடுவது பற்றிக் கூறியுள்ளார்.

''ஒத்து எழும் அன்பிலே எழுந்த இறைவனை தொழ அவர் சிவகுருவாக வந்து, பாசங்களை அகற்றி என் தலையிலே திருக் கரத்தை வைத்து, அருள் செய்ய உள்ளத்திலே குருவின் பாதங்கள் பதித்துவிடும்'' என்று அவர் பாடியுள்ளார்.

இப்பாடலிலே 'அன்பிலே ஈசன் எழுந்தான்' என்று கூறாமல் 'இசைத் தெழும் அன்பில்' என்று கூறுவர். இறைவன் தோன்றும் அன்பு சாதாரணமானதாக இருக்காது. இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட பக்தர்களின் பக்தி சாதாரணமானதல்லவே. அந்தப் பக்தியிலே சிக்குப் பட்ட இறைவன் குருவாக எழுந்தருளி தலையிலே தன் கரங்களை வைத்த அந்த நேரத்திலே அவரது திருவடிகளும் உள்ளத்திலே பதிகின்றன.

சென்னியிலே குரு எல்லோருக்கும் கரங்களை வைத்துத் தீட்சையளிப்பதில்லை. அவர் அதற்கு ஏற்றவரென உவந்தபோதுதான் கைகளை வைத்து ஆட்கொள்கின்றார். அப்படி விரும்பியாட்கொண்ட குருவின் பாதங்கள் தான் ஆட்கொண்டவனின் உள்ளத்தை உவந்து அதிலே பதிகின்றன.

இறைவனால் ஆட்கொள்ளப் படும்போது ஒரே நேரத்தில் மூன்று நான்கு விடயங்கள் நடைபெறு

வதாகத் திருமூலர் கூறுகின்றார். சென்னியிலே கரங்களை வைப்பதும் உள்ளத்துள் திருப்பதங்கள் பதிவதும் பாசங்கள் அகல்வதும் ஒரே நேரத்தில் நடைபெறுகின்றன. அடுத்த பாடலிலே

தாள்தந்த போதே தலைதந்த எம்இறை
வாள்தந்த ஞான வலியையும் தந்திட்டு
வீடுஅந்தம் இன்றியே ஆள்கென விட்டுஅருள்
பாடுஇன் முடிவைத்துப் பார்வந்து தந்ததே

என ஆட்கொள்ளப்பட்ட நிலையைத் தொடர்ந்து பாடுவார்.

மலர்ப்பதங்களைத் தந்தபோது வாள் போன்ற ஞான வலிமையையும் இறைவன் அருள்கிறார். இந்த வாளை எதற்காகத் தருகிறார். சாதாரணமான வாள் தூலப்பொருள்களை அழிக்கப் பயன்படும். ஆனால் ஞானவாள் கட்புலனாகும் பொருட்களுக்காகவல்ல. கட்புலனாகாத பாசத்தளைகளையும் எம்மை மயக்கி அடிமைப்படுத்தி, தன் பிடியிலிருந்து விடுபட முடியாதவாறு சிக்கவைத்திருக்கும் மாய வலையையும் அறுத்தெறிய ஒருவாள் தேவைப்படுகிறது. அதற்குத்தான் மெஞ்ஞானம் என்னும் வாளை அருள்கிறார்.

குருபதம் உள்ளத்தில் பதியும் போது மெஞ்ஞானமும் சித்திக்கிறது. ஞானம் பெற்றதும் இதுவரை ஆன்மாவை அடிமைப்படுத்தியிருந்த புலன்களும் மாயையும் ஆன்மாவுக்கு அடிமையாகின்றன. இவற்றை அடிமைப்படுத்தும் தலைமைத்துவம் அதனால் கைவருகிறது.

அன்பிலே எழுந்த ஈசன், சிவகுருவாகி தலைமேல் கரம் வைத்து ஆட்கொள்ளும் போது, அவரது பதம் மனதிலே பதிய மெஞ்ஞானம் பிறந்து உலகப் பற்றுக்களுக்கு அடிமைப் படாத நிலை ஏற்படுகின்றது என்பதை திருமூலர் அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

திருவடிப்பேறு பற்றிய அவரது பாடல்கள் ஆழ்ந்த தத்துவப் பொருள் கொண்டவை. அவற்றில் கூறப்படும் சில விடயங்களை அடுத்த கட்டுரையிலும் பார்ப்போம்.

பக்தர்கள் அடிக்கடி கோயிலுக்குச் சென்றால்தான் கோயில் சுத்தமாக
இருக்கும். அங்கு பணிபுரிகிறவர்களுக்கு ஒரு பக்தி சிரத்தையை
ஏற்படுத்தும். இந்த பக்தியால் இறைவன் காரியங்கள்
தடையின்றி நடக்கும். அதனால் தவறாமல்
கோயிலுக்கு சென்று வாருங்கள்.
சுற்றாடல் புனிதமாகும்.

# அமரர் செ. அருட்பிரகாசம் (அம்மான்)

1993 ஆம் ஆண்டு எமது பேரவை ஆரம்பிக்கப்பட்ட கால கட்டத்தில் எமக்குஉற்சாகம் அளித்து எம்மை ஆன்மீகப்பணியில் ஈடுபடத் தூண்டியதுடன் எமது பேரவையின் ஆரம்பகால உறுப்பினராகவும் விளங்கியவர்தான் அமரர் செ. அருட்பிரகாசம் அவர்கள். அன்னார் 10 - 04 - 2005 இல் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நாம் மிகுந்த துயரம் அடைந்தோம்.

நாட்டுச் சூழல்காரணமாக சில வருடங்கள் எமது நாட்டைவிட்டுச் சென்றிருந்தாலும் மீண்டும் நாட்டிற்கு திரும்பி வழமைபோல தனது ஆலயத்திருப்பணிகளை மிகவும் ஆர்வத்துடன் மேற்கொண்டிருந்ததை நாம் அனைவரும் அறிவோம். இந்த நிலையில் அன்னார் இறைபதம் அடைந்தமை எமக்கு மட்டுமல்ல ஆலயத்திருப்பணியில் ஆர்வமுள்ள அனைவருக்கும் ஏற்பட்ட ஒரு இழப்பாகும்.

இவருடைய தந்தையார் செல்லத்துரை அவர்கள் வல்வை வைத்தீஸ்வரப் பெருமானின் இராஜகோபுரத்தை அமைப்பதில் பெரும்பங்காற்றியவர் அவரைப்போலவே திரு. அருட்பிரகாசம் அவர்களும் பலஆலயத் திருப்பணிகளில் ஈடுபட்டிருந்ததை நாம் நன்றியுடன் நினைவு கூற வேண்டும்.

வல்வை வைத்திஸ்வர ஆலயத்தின் இராஜகோபுர திருத்த வேலைகள், வல்வை முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் மூலஸ்தானத் திருத்தவேலைகள், தொண்டைமானாறு காட்டுப்புலம் பாண்டுரங்கன் ஆலயத்திருத்த வேலைகள் கெருடாவில் வீரமாகாளி அம்மன் திருப்பணிவேலைகள் போன்ற பல்வேறு ஆலயத்திருப்பணிகளை அன்னார் மனம் உவந்து செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆலய உற்சவம்நடைபெறும்காலங்களில் எமதுபகுதியில் உள்ளஆலயங்களுக்கும் தாமரைப் பூக்களைச் சேகரித்து வழங்குவதன் மூலம் உற்சவ கைங்கரியங்களை சிறப்பாக நடாத்துவதற்கும் அவர்தமதுபங்களிப்பை வழங்கியுள்ளார். இதனால் அனைவராலும் அறியப்பட்ட ஓர் அன்பராகவும் திரு. செ. அருட்பிரகாசம் அவர்கள் விளங்கி வந்துள்ளார்கள்.

ஆலயத்திருப்பணிகளைப் போல சமூகப்பணிகளைச் செய்வதற்கும் இவர் தவறவில்லை. இவ்வாறு சமய சமூகப்பணிகளைச்செய்து சமூகத்திற்காக வாழ்ந்த ஒரு அன்பரை இழந்துள்ளமை உண்மையில் ஒரு பெரிய இழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

ச. ஆ. சை. க. ப. பேரவை.
தொண்டைமானாறு
27 - 04 - 2005

பேரவையின் சார்பில்
திரு. ந. அரியரத்தினம்

(தொடர்ச்சி..

உ

# யார் இந்த (சு) செல்லம்மா?

## சச்சிதானந்தா ஆச்சிரமம்

### ஸ்ரீ சச்சிதானந்தா சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கம்

### குருநாதரின் வழிநடத்தலில்

பிறிதோர் சமயம் ஆச்சிரமக் குடியில் அம்மையார் தனியே இருந்த சமயம் ஓர் மனிதன் குடிவெறியில் அவ்விடம் வந்தான். ஆச்சிரம வளவுக்குள் வந்து அம்மையாரை வாய்க்கு வந்தபடி திட்டினான். அம்மையார் பொறுமையுடன் இருந்தார். திட்டிய படியே இருந்த அம்மனிதன் சுவாமிகளையும் கேவலமாகத் திட்டத் தொடங்கினான். சுவாமிகளை கேவல மாகத் திட்டுவதை அம்மையாரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவனை அங்கிருந்து சென்றுவிடுமாறு கூறியும் அவன் கேட்கவில்லை. வசை பாடுவதை நிறுத்தவுமில்லை. அம்மை யார் பத்திரகாளி வேஷம் கொண்டார். எங்கிருந்து அவரிற்கு அவ்வளவு பலம் வந்ததோ தெரியவில்லை. அம் மனிதனை நையப்புடைத்தார். அவன் நிலத்தில் வீழ்ந்துவிட்டான். அம்மை யாரோ ஆவேசம் வந்தவராய் அவனைத் தாக்கினார். அவன் எழுந்து ஓடியே விட்டான். பின்பு சுவாமிகள் வந்து விடயம் கேள்விப்பட்டதும், அம்மையாரிடம், "நல்லது அவசியம் ஏற்பட்டால் காளியாகவும் மாறவேண் டும்" என்று கூறினார். தவம் என்பது பேணிப் பாதுகாக்க வேண்டியதொன்று. அன்பும் பொறுமையும் மட்டுமன்று அவசியம் ஏற்படின் கோபமும் கொள்ள வேண்டும் என்று அம்மையாரிற்கு அறிவுறுத்தினார் சுவாமிகள்.

இன்னுமோர் சமயம் சுவாமிகள் ஆச்சிரமத்தில் அமர்ந்திருந்தபோது அங்கு ஒருவர் மதுபோதையில் வந்தார். வந்தவர் சுவாமிகளைப் பார்த்து "ஏ சுவாமி! உன்னிடத்தில் மட்டும் தான் சுவாமி இருக்கிறதென்று நினையாதே. இங்கேயும் அதுதான் இருக்கு" என்று தன் நெஞ்சை தொட்டுக்காட்டினான். குடிபோதையில் அவன் உளறினா னாயினும், சுவாமிகள், "நீ சொல்வது மிகவும் சரியே" என்று கூறி அவரை அழைத்து வெற்றிலை பாக்குக் கொடுத்து அனுப்பி வைத்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அம்மையாரோ மிகவும் ஆச்சரியமடைந்தார். ஷஷஇது என்ன சுவாமி? குடிகாரனிடத்திலும் சுவாமி இருக்குமோ? பெரிய அடியவர் களிடத்திலல்லவோ சுவாமி இருக்கும்" என்று கூற, ஓ! உனக்குக் கனக்கத் தெரியுமோ? அது (உண்மைப் பொருள்) எல்லாவிடத்திலும் உள்ளது. அதுதான் எல்லாமாய்த் தெரிகிறது. போகப்போக உனக்கு விளங்கும் என்று கூறினார் சுவாமிகள். அம்மை யாரும் தமது தவறை உணர்ந்தார்.

மேற்கூறியவை எடுத்துக் காட்டான, ஒரு சில சம்பவங்களே யாகும். அன்றாடம் நிகழும் ஒவ்வொரு சம்பவங்களிற்கும் சுவாமிகள் மெஞ்ஞானம் விளக்கங்களை அம்மை யாரிற்கு கூறிவந்தார். அவை எல்லா வற்றையும் இங்கு குறிப்பிடின் இவ் வரலாறு அதிகம் விரிவு கொண்டு விடும் என்பதனால் இங்கு அவை சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

சுவாமிகள் தன்னை மெஞ்ஞான வழியில் நடத்திச் சென்றதை நினைவு கூறும் பொழுது அம்மையார் கண்களில் தண்ணீர் தாரையாகப் பெருகும். சுவாமிகள் தமக்குக் குருவாக வாய்த்தமை தாம் எய்திய பெரும் வாய்ப்பு என்றெண்ணி னார். அம்மையார் என்னைப்போல் ஒரு பேய்க்கட்டையையும் ஒரு பொருட் டாகக் கருதி ஆட்கொண்ட சுவாமி என்றால், நான் அதைப்பற்றி என்ன சொல்ல முடியும். என்று அடிக்கடி கூறுவார். சுவாமிகள் அம்மையாரிற்கு வழங்கிய ஞானச்செல்வம் எத்தகை யது என்பதை அம்மையாரின் பிற் காலத்தில் அவருடன் நெருங்கிப் பழகியவர்களிற்கு நன்கு புரியும். படிப்பு வாசனை பெரிதாக அறியாத அம்மையார் மாயையைப் பற்றியும் அதனை எவ்வாறு கையாள்வது என்பது பற்றியும் மெஞ்ஞானத்தைப் பற்றியும் பகிடியாகக் கூறும் கதைகளே அவரின் ஆற்றலிற்கும் சான்று பகர்வையாகும். இது குறித்து பின்பு விரிவாகக் காண்போம்.

# குருநாதரின் சமாதி

அம்மையாரின் குருநாதராகிய ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் ஞானஒளி வீசிக்கொண்டிருக்கும் காலத்தில் தமது தேக நீக்க காலமும் சமீபித்து வருவதைத் திருவருள் வயத்தால் அறிந்து கொண்டார். சுவாமிகள் தமது அடியவர்களிடம் இதைப் பற்றி எடுத்துக் கூறினார். 1960ம் ஆண்டு தை மாதம் புனர்பூசத்தன்று தாம் தேகநீக்கஞ் செய்யப் போவதாகச் சொன்னார். இதுவரை தம்மை ஆட்கொண்டு ஞானவழி காட்டிப் பேணிய குருநாதனின் தேகநீக்க காலம் அண்மித்துவிட்டதையறிந்து அவரது அன்பர்கள் மிகுந்த மனவாட்ட முற்றனர். அம்மையாரும் மிகவும் மனம் வருந்தினர். அதுகண்ட சுவாமிகள் "தேகம் மறைகிறதே ஒழியத் திருவருள் ஒருபோதும் மறைவதில்லை" எனக்கூறித் தேற்றினார்.

தமது தேகத்தை துறக்க வேண்டிய காலம் சமீபித்து விட்டதன் காரணமாக 1954ம் ஆண்டு புரட்டாதி மாதமளவில் தாம் வெளியில் சென்று பிச்சையேற்பதை நிறுத்திக் கொண்டார். ஆச்சிரமக்குடிலிலேயே தங்கியிருந்தார். இவ்வாறு சுவாமி களின் தேகநீக்கம் நிகழ்ந்தால் அதனை எங்கு சமாதி வைப்பது என

அன்பர்கள் கேட்க, கைதடியில் சமாதி வைபடாது எப்படியோ வெகு விமரிசையாக பெருந்தொகையான அடியார்களது கூட்ட நடுவிலே எங்கோ ஒரு சுடலையில் நிகழும் என்று கூறினார். அதற்குரிய பொருட்கள் எவை எவையெனக் கேட்டு, வேண்டியவற்றைச் சேகரித்துக் கொண்டார்கள் அடியவர்கள்.

சுவாமிகள் 1959ம் ஆண்டு புரட்டாதி மாதமளவில் ஆச்சிரமப் பூசையைக் கைதடி வடக்கிலுள்ள தமது அடியவர்களிடம் ஒப்படைத்தார். இவ்வடியவர்களுள் கைதடி தபால் அலுவலகத்தில் கடமைபுரிந்து வந்த வரும் கைதடி வடக்கில் வசித்து வந்த வருமான சுப்பிரமணியம் என்பவர் முக்கியமானவர் ஆவார். இவரைப் பற்றிய குறிப்புக்களை முன்பு கண்டோம். அவ்வாறு பூசையை ஒப்படைக்கும்போது சுவாமிகள் கூறிய தாவது "அம்மாவை இங்கு ஒருவருக் கும் தெரியாது. சுவாமியின் அருட் தன்மையை இங்குள்ளவர்கள் அறிய மாட்டார்கள். ஆனாலும் மனேஜர் செல்லத்துரை (அம்மாவின் கணவர்) தாம் இருவரும் நற்கதியடைய வேண்டு மென்ற நோக்கத்தோடு தான் சுவாமிகளிடம் உபதேசம் பெற்றதுமல் லாமல், அம்மாவையும் உபதேசம் பெறச்செய்தார். ஆனால் அவர் உபதேசம் பெற்றபின் அக்கைங்கரியத் தினின்றும் மாறுபட்டுக் கொண்டார். என்ன செய்வது, ஆனாலும் உபதேசம் பெற்றது முதல் மற்றய எல்லா இலௌவீக இன்பங்களையும் துறந்து சுவாமிகளின் திருவருட்பேறே மேல் என்று நம்பி இல்லறம் விட்டு வெளி யேறிய பிள்ளையை (அம்மா) எப்படி யும் காக்கவேண்டியது. இத்தேகத் தினால் மட்டுமல்ல, தேகத்தை நீக்கிய பின்னரும் திருவருள் வழி நின்று அம்மாவுக்கு ஆகவேண்டிய உதவிகள் செய்தாக வேண்டும். எனவே சுவாமி தேகம் விட்டாலும் ஆகவேண்டிய அனுசரனை உதவிகள் எல்லாவற்றை யும் மகனே! சுப்பிரமணியம் நீ கவனிக்க வேண்டும். சுவாமி உன்னிடம் எதிர்பார்ப்பது இதுவே. உனக்கு வேண்டியதை எல்லா வற்றையும் சுவாமி கவனிக்கும். அம்மாவை இனத்தவரோ, மற்றவர் களோ அறியமாட்டார்கள். ஆனால் காலப்போக்கில் எல்லோரும் அவரின் (அம்மாவின்) சொல்லுக்கு கட்டுப்பட்டு நடப்பார்கள். நீ மடத்தையும் அம்மா வையும் சுவாமி தந்த பூசையையும் கவனித்துக்கொள்" என்றார். அச் சமயம் அம்மையாரிடம் சுவாமிகள், "பிள்ளை சுப்பிரமணியம் (இவரை மணியம் என்று சுவாமிகள் அழைப்பதுண்டு) மிகவும் நல்லவன். ஆனால் முற்கோபி, நிதானமானவன், உனக்கு உதவியாயிருப்பார். எக்காரணம் கொண்டும் உனது சொந்தக்காரரை மேலாக எண்ணி அவரைக் குறைவுபட நடாத்தி விடாதே, அவன் உனக்குப் பிள்ளை போலிருப்பான்" என்று கூறினார். இதையே இறுதிவரை கடைப்பிடித்து வந்தார்.

(தொடரும்...

(தொடர்ச்சி..

உ

01-08-2004இல் இருந்து

## நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ நதியா நகைமாடம் | | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| T. தியாகலிங்கம் | S.V.M | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| திரு பாக்கியரெட்ணம் | (பாக்கி) | அச்சுவேலி | 2மூடை அரிசி |
| R. முகுந்தன் | மாலிசந்தி | பருத்தித்துறை | 1000. 00 |
| தவமணிநாயகம் | ஜமுனா | | 500. 00 |
| தி. ரூபகுமார் | | கோண்டாவில் | 5000. 00 |
| மா. தங்கவேல் | போடிங் றோட் | பருத்தித்துறை | 3000. 00 |
| கு. அருணகிரிநாதன் | சிவன் வீதி | ஆவரங்கால் 1மூடை அரிசி | 1000. 00 |
| பொ. சந்திரமோகன் | ஓசன் றேடர்ஸ் | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| த. விக்னேஸ்வரன் | கன்னாதிட்டி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சுவாமி சித்ரூபானந்தா மூலம் | | | |
| ச. ராதாகிருஸ்ணன் | ஐயனார் கலட்டி | (அவுஸ்திரேலியா) | 5000. 00 |
| சீ.சி. கந்தையா | | ஆவரங்கால் மேற்கு 1மூடை அரிசி | 2000. 00 |
| கெங்கைக்கரசி | | மயிலிட்டி | 5000. 00 |
| ஆறுமுகம் சிவராசா | வறணி | இயற்றாலை 1மூடை அரிசி | 1000. 00 |
| நவரெத்தினம் செங்கோடன் | டச்சு வீதி | மீசாலை | 2000. 00 |
| துர்க்கா தேவஸ்தானம் | | தெல்லிப்பழை | 10,000. 00 |
| Dr. K. சிவஞானசூரியர் | | கொழும்பு | 5000. 00 |
| P. அனித்தா | | கொழும்பு | 5000. 00 |
| B. ரஞ்சி | | ஜேர்மன் | 5000. 00 |
| கைலை வே. சுவாமிநாதன் | | இடைக்காடு | 1000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் | | பத்தமேனி | 1000. 00 |
| இ. சுப்பிரமணியம் | | சிறுப்பிட்டி | 1000. 00 |
| கு. சயந்தன் | | அச்சுவேலி தெற்கு | 5000. 00 |
| சுதாகர் தர்மலிங்கம் | | இடைக்காடு | 1000. 00 |
| நாகலிங்கம் ராஜகுலசிங்கம் | | அச்சுவேலி தெற்கு | 10,000. 00 |
| ஆனந்தராஜா மூலம் தில்லைநாதன் | | (வங்கி) | 1000. 00 |
| தவராசா செல்வஜோதி | மிதிலை | கரவெட்டி | 500. 00 |
| செ. சிவநேசன் | | அச்சுவேலி | 1000. 00 |
| க. சத்தியகாந்தம் | | கொழும்பு- 6 | 2000. 00 |
| இ. சந்திரகுமாரி | | தெல்லிப்பழை | 1மூடை அரிசி |
| சொ. செல்லத்துரை குடும்பம் | | பருத்தித்துறை | 1மூடை அரிசி |

வாழ்க்கை எனும் பாறையை அறிவு எனும் உளியால் செதுக்கு.

நா. குகன் குகன் ஸ்ருடியோ பருத்தித்துறை 1000. 00
கா. அருந்தவராசா தொண்டைமானாறு 2000. 00
மோகானந்தன் பிரதீபன் சீதாப்புலம் கரணவாய் 5000. 00
V.S. கந்தையாவின் ஞாபகமாக
கந்தையா சிவசுப்பிரமணியம் மாளிகாவத்தை கொழும்பு 5மூடை அரிசி
2புட்டி பருப்பு 2000. 00
மு. நவரெத்தினம் வீரப்பராஜன் கரணவாய் 1000. 00
மா. தம்பிராசா அச்சுவேலி வடக்கு 1மூடை அரிசி
பேராசிரியர் சிவசாமி மூலம்
A. சண்முகராஜா லண்டன் 20,000. 00
சி. பத்மராசா நவிண்டில் 2000. 00
த. யோகேஸ்வரன் சித்தங்கேணி 1மூடை அரிசி, தேங்காய்
R. முத்துலிங்கம் செட்டியார் (இராமையாச்செட்டியார்) யாழ் தேங்காய் 3000. 00
க.கு.க மூலம் சிவலோகநாதன் 3மூடை அரிசி
க.கு.க மூலம் கணேசன் 1மூடை அரிசி
K.S. கணபதிப்பிள்ளை கைதடி 2000. 00
சிவகுமார் செல்வநாயகி அச்சுவேலி தெற்கு 3000. 00
K. கஜன் 17/1 மணல்தெரு வீதி திருநெல்வேலி 1100. 00
சுபாசினி குடும்பம் வவுனியா 5000. 00
சீ. கந்தசாமி இராசவீதி நீர்வேலி 1மூடை அரிசி
V. தனக்குமார் அச்சுவேலி 500. 00
ராசா கொழும்பு 10,000. 00
Dr. G. பவானி மகப்பேற்று நிபுணர் 10,000. 00
செல்வி ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் 4000. 00
ந. உதயகுமார் மூத்தவிநாயகர் கோவிலடி கரணவாய் 1000. 00
சண்முகநாதன் செல்வராசா ஏழாலை தெற்கு 1மூடை அரிசி
த. மோகன் இமையாணன் 1000. 00
பொ. மாணிக்கவாசகம் பொன்வயல் (புலோலி) 5000. 00
நாகேந்திரம் கௌரி அச்சுவேலி தெற்கு 2000. 00
S. சிவலிங்கராசா யாழ்ப்பாணம் 1மூடை அரிசி 1000. 00
ம. சிறீதரன் வல்வெட்டித்துறை (லண்டன்) 15,000. 00
செல்வராணி ரெட்ணசபாபதி ஜேர்மன் 2000. 00
சி. பாலசிங்கம் (கரவெட்டி) லண்டன் 98,000. 00
க. தியாகராஜா P.M. திருமலை 1000. 00
வ. துரைராஜா மூர் ரோட் கொழும்பு 5000. 00
செல்லத்துரை தயாபரன் 1000. 00

(தொடரும்.

அத்தியாயம் -87 உ (தொடர்ச்சி..

## மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

(மகாபாரதத்திலிருந்து)

# யுதிஷ்டிரரின் மனக்கலவை.

சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள்

பீஷ்மரின் இறுதிக்கிரியைகளை முடித்து, அஸ்தினாபுரம் மீண்ட பாண்டவர்களும் கண்ணபிரானும் ஆட்சி முறைமைகளைக் கவனித்து நாட்டின் நலன்களைப் பேணுவதில் முனைந்திருந்தனர். இவ்வேளைகளிலெல்லாம் கவலை குடிகொண்ட மனத்தினராய் உற்சாகமற்ற முறையில் யுதிஷ்டிரர் காணப்பட்டார். அரசியற் கருமங்களைக், கடமையைச் செவ்வனே செய்யும் நோக்கில் மேற்கொண்டிருந்தார். எனினும் அவர் உள்ளம் சோகத்தில் மூழ்கியே இருந்தது. இதனைக் கவனித்த திருதராஷ்டிரர், கண்ணபிரான், வியாசமகரிஷி முதலானோர் யுதிஷ்டிரருக்குத் தேறுதல் மொழிகள் பலவற்றை எடுத்துரைத்தனர். அரசவையில் வீற்றிருந்த யுதிஷ்டிரரை நோக்கி மன்னன் திருதராஷ்டிரன் "குருகுலத் தோன்றலே! ஷத்திரிய தர்மப்படி நீ போரில் வெற்றி வாகை சூடி ஆட்சியைப் பெற்றுக் கொண்டுள்ளாய். சகோதரர்களுடனும் நண்பர்களுடனும் சேர்ந்து நல்லவற்றைச் செய்து ஆனந்தமாக நீ இருக்க வேண்டும். நீ வீணே கவலைக்கடலில் மூழ்கி உற்சாகமின்றி இருக்கின்றாய். உண்மையில்த் துயரப்பட வேண்டியவர்கள் நாங்களே. வயது முதிர்ந்தவர்களான நாங்கள் துயரப்படுவதனைத் தவிர்க்க வேண்டுமானால் நீ உற்சாகமாக இருக்க வேண்டும்." என்று எடுத்துரைத்தார்.

இதன் பின்னர் கண்ணபிரான் தருமரை நோக்கி "மன்னா! ஒருவன் அதிக துயரடைந்தால் காலம் சென்ற அவனது முன்னோர்கள் துன்பப் படுவார்கள். எனவே நீ அவர்களையும் தேவர்களையும் மகிழ்வித்து நீயும் மகிழ்வாக இருக்கும் பொருட்டும் தான தர்மங்களை இயற்று. நற்பயன் தரக்கூடிய யாகங்களைச் செய். விருந்தினர்களையும், பிராமணோத் தமர்களையும், ஏழை எளியவர்களையும் திருப்தி செய்யும் வகையில் அன்னதானம் முதலானவற்றைச் செய். போர் புரிவது மன்னர்களின் தர்மம். அதில் இறப்பவர்களை நினைத்துக் கவலை கொள்வது மடமையாகும். எனவே துயரத்தை விட்டொழித்து உனது கடமைகளைச் செய்வாயாக."என்று தேறுதல் கூறலானார். கண்ணபிரானின் உரைகளைச் செவிமடுத்த தருமர் "கோவிந்தரே! என்மீது அதிக அன்புள்ளமையால்த் தாங்கள் இவ்விதம் கூறுகிறீர்கள். பீஷ்மர், துரோணர்,

கர்னன் முதலானோர் என்னால்க் கொல்லப்பட்டார்கள். நான் போர் புரிய முனைந்ததனால் அவர்கள் எல்லோரும் கொல்லப்பட்டனர். இவர்கள் எல்லோரையும் இழந்த என்மனதில் ஆறுதல் ஏற்படமுடியாது. என் பொருட்டு நடந்த இக்கொடிய பாவத்தை நீக்கிக் கொள்ள வழிமுறைகள் ஏதும் இருப்பின் எனக்கு எடுத்துக்கூறி எனக்கு மனநிம்மதியைத் தாருங்கள்" என்று வேண்டிக் கொள்ளலானார்.

இவ்வாறு யுதிஷ்டிரர் கேட்டுக் கொண்டதும் சபையில் வீற்றிருந்த வியாச மகரிஷி "குற்றமற்ற மன்னா! மன்னர்கட்கு போர்புரிதல் கடமையாகிறது. தனது கடமையைச் செய்தற்காக மன்னன் துயரப்படுதல் கூடாது. யுதிஷ்டிரா! பாவம் செய்த ஒருவன் அதனை நீக்கிக் கொள்ள பலப்பல வழிமுறைகள் உண்டு.. தானம், தவம், வேள்வி என்பனவற்றை மேற்கொள்வதின் மூலம் அவன் செய்த பாவங்கட்குப் பிராயச்சித்தம் தேடிக் கொள்ளலாம். எனவே பெரும் புண்ணியபலன்களைத் தரவல்லதான அஸ்வமேத யாகத்தை நீ செய்து மனச்சாந்தியைப் பெற்றுக்கொள்" என்று அறிவுரை கூறலானார். உடனே யுதிஷ்டிரர் "முனிபுங்கவ! தங்களது கட்டளைப்படி யான் யாகத்தைத் தொடங்கி நடாத்த முடிவு செய்கிறேன். ஆயினும் அதற்குரிய பொருள் வசதியில்லை. தேவர்கள், பிராமணர்கள் ஏழை எளியவர்கள் முதலானோரைத் திருப்தி செய்யும் வகையில் வேள்வி செய்வதற்குப் பெரும் திரவியம் வேண்டும். ஆனால் தற்போதய நிலையில் பொக்கிஷம் காலியாக இருக்கிறது. போரினால் நலிவடைந்திருக்கும் குடிமக்களிடமோ, மன்னர்களிடமோ இருந்து திறை பெறவும் முடியாது. ஆகவே சுவாமி நீங்கள் தான் யாதாகிலும் வழி சொல்லவேண்டும். என்று கேட்டுக் கொண்டார். அப்பொழுது வியாச மகரிஷி "இமயமலையடிவாரத்தில் பெரும் பொக்கிஷம் ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருப்பதனைத் தெரிவித்து அதனை எடுத்துவரும்படி பீமன் முதலானோரை அனுப்பி வைத்தார்.

## பரீட்சித்து

அஸ்வமேத யாகம் நடக்க இருப்பதனால் எல்லாநாட்டு மன்னர்களும், சிற்றரசர்களும் அஸ்தினாபுரியை அடைந்து அங்கு தங்கியிருந்தனர். கிருஷ்ணன், சுபத்திரை, பலராமர் முதலானோரும் அஸ்தினாபுரியில் வந்து தங்கியிருந்தனர். இவ்வேளையில் அபிமன்யுவின் மனைவி உத்தரையின் பிரசவகாலம் வந்தது. உத்தரைக்கு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் அசுவத்தாமன் ஏவிய பிரமாஸ்திரத்தால் பாதிப்படைந்தமையால் உத்தரையின் குழந்தை இறந்து பிறந்தது. இதனைக் கண்ட அந்தப்புர மகளிர் எல்லோரும் கதறிப் புலம்பினர். அபிமன்யு இறந்த நிலையில், அவனுக்குப் பிறந்த மகவும் இறந்தமை எல்லோரையும்

கவலை கொள்ளச் செய்தது. செய்தி அறிந்த கிருஸ்ண பரமாத்மா அந்தப் புரத்தையடைந்து உத்தரையின் மாளிகையை அணுகினார். உத்தரை பெருஞ் சோகத்தில் மூழ்கியவளாய்க் கண்ண பரமாத்மாவைக் கண்டதும் கதறிப் புலம்பலானாள். கண்ணபிரான் அவளுக்கு ஆறுதல் கூறி அபய மளித்து "உத்தரையே எல்லோரும் பார்த்திருக்கும் இவ்வேளையில் இக்குழந்தைக்கு உயிர் ஊட்டி உலவச் செய்கிறேன். ஒருவரும் கலங்க வேண்டாம்" என்று கூறிய வராய்த் தமது திருக்கழல்களால் குழந்தையைத் தலையில் இருந்து பாதம் வரை மெல்ல வருடலானார். உடனே அக்குழந்தை உயிர் பெற்று அசைந்தாடியது. பரதகுல மாதர் அனைவரும் மட்டற்ற மகிழ்ச்சியில் திளைத்தவராய்க் கண்ணபிரானின் மலரடிகளை வணங்கி நின்றனர். உத்தரை குழந்தையைத் தூக்கிய வளாய் வந்து கண்ணபிரானை வணங்கி நின்றாள். கண்ணபிரானும் மகிழ்வடைந்தவராய்க் "குலம் தழைக்க வந்தவன் இவன். பரதகுலம் நலிவடைந்த நிலையில் இவன் பிறந்த மையால்ப் "பரீட்சித்து" என்ற நாமத் துடன் இக்குழந்தை பிரகாசிக்கட்டும்" என்று குழந்தைக்கு பெயர் சூட்டலானார்.

பரீட்சித்து பிறந்து ஒரு மாதம் பூர்த்தியாகியது. இவ்வேளையில் பொக்கிஷம் எடுத்துவர இமயமலைச் சாரலுக்கு சென்றிருந்த பீமன் முதலா னோர் திரும்பி வந்தனர். பெருஞ்செல் வத்துடன் வந்தவர்கள் அபிமன்யுவின் புதல்வன் பிறந்த செய்தியை அறிந் ததும் பெருங்களிப்படைந்தனர். பாண்ட வர்களின் வாழ்வில் இன்பமான காலம் தொடங்கலாயிற்று.

## அஸ்வமேத யாகம்

வியாசமகரிஷியின் நல்லாசி யுடன் யாகத்துக்கான ஆரம்ப ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. சித்திராபௌர்ணமி தினத்தில் யுதிஷ்டிரர் யாகம் செய்வதற்கான சங்கல்ப தீட்சை செய்து கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டது. சிறந்த அஸ்வம் ஒன்று தெரிவு செய்யப்பட்டது. அதன் பாதுகாவலனாக அர்ச்சுனன் நியமிக் கப்பட்டான். குதிரை முன் செல்ல பின்னே சென்ற அர்ச்சுனன் குதிரை அடைந்த நாடுகளை அடைந்து வெற்றி பெற்றவனாய் மீண்டான். நாற்றிசைகளிலும் பகை இல்லை என்ற நிலையில் பேரரசனாகிய யுதிஷ் டிரர் யாகம் செய்யலானார். சுபயோக வேளையில் ஆரம்பிக்கப்பட்ட யாகம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. அந்தணர், ஏழை எளியோர் முதலா னோர் போதுமென்று சொல்லும் அள வில் நிறைந்த தானங்கள் வழங்கப் பட்டன. யுதிஷ்டிரரின் சிறப்பான ஆகுதிகளைப் பெற்று மகிழ்வுற்ற தேவர்கள் பூமாரி பொழிந்து யுதிஷ் டிரரை ஆசீர்வதித்தனர். இதனால் பாண்டவர்கள் உட்பட யாக சாலை யில் இருந்த அனைவரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். (தொடரும்...

நல்ல அண்டைவீட்டுக்காரன் விலைமதிப்பற்றவன்.

உ

# செய்திக் கொத்து

☞ "ஆத்மஜோதி" ஆன்மீக சஞ்சிகை வெளியீட்டு விழா 16- 04 -2005 சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் யாழ் இந்து கலாச்சார உதவிப்பணிப்பாளர் சிவ மகாலிங்கம் தலைமையில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடந்தேறியது.

☞ யாழ்ப்பாணம் வணிகர் கழகம் யாழ் மாவட்டத்திலுள்ள கிராமப்புற வைத்திய சாலைகளுக்கு தேவைப்படுகின்ற மருந்துப்பொருட்கள், மருத்துவ உபகரணங்களை வழங்க முன்வந்துள்ளது. பயன்பெற விரும்பும் வைத்தியசாலை அவை தொடர்பான விபரப்பட்டியலைத் தருமாறு வணிகர் கழகம் கேட்டுள்ளது.

☞ இந்து தர்மாசிரியர் பரீட்சை ஒக்ரோபர் மாதம் நடைபெற உள்ளதால் பரீட்சைக்கு தோற்றவிரும்புவோர் அதற்குரிய விண்ணப்பப் படிவத்தினை 14- 05- 2005க்கு முன்னதாக இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

☞ கிளானை அல்வாய் மேல் மருவத்தூர் ஆதிபராசக்திபீட சித்திரைப் பௌர்ணமி விழா 24ம் திகதி காலை நடைபெற்றன. அன்றைய தினம் விஷேட அபிஷேகம் குத்துவிளக்கு கலச வேள்வி என்பன இடம்பெற்றன.

☞ புத்தாண்டையொட்டி பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குக் கல்வியில் ஆர்வமூட்டும் புத்தகங்களை வாக்கிப் பரிசளிக்கும்படி கோரும் சுற்றுநிருபத்தை கல்வியமைச்சு பாடசாலைகளுக்கு அனுப்பிவைத்துள்ளது. விடுமுறைக் காலத்தில் மாணவர்கள் இப்புத்தகங்களைப் படிப்பதுடன் இரண்டாம் தவணைத் தொடக்கத்தில் வகுப்பாசிரியரிடம் அப்புத்தகங்களை கையளிப்பதன்மூலம் பாடசாலை நூலகங்கள் ஓரளவுக்கு ஏனும் பயனுடைய நூல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையில் இச்சுற்றுநிருபத்தை அனுப்பிவைத்துள்ளது.

☞ மாணவர்கள் மத்தியில் அறநெறி அறிவு குறைந்து வருவதைக் கருத்திற் கொண்டு மாணவர் மத்தியில் அறநெறி விழாப்போட்டியொன்றை நடத்தக் கரவெட்டி பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

▶▶ எதிலும் திருப்தி தராதவருக்கு அதிகம் தேவைப்படும். ◀◀

☞ இளைஞர்களையும், யுவதிகளையும் சமயவாழ்வு வாழச்செய்வதற்கும், சமய போதகர்களாகவும், சமய சொற்பொழிவாளர்களாகவும் வளர்த்தெடுப்பதற்குமாக இந்து இறையியற் கல்லூரி ஒன்று விரைவில் நல்லூரில் உருவாக உள்ளது. சமயச் சொற்பொழிவாளர் ஆறு. திருமுருகன் இறையியல் கல்லூரியை நிறுவுவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார்.

☞ தென்மராட்ச்சி பிரதேச இலக்கியப் பெருவிழாவுக்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன. இவ்விழாவை முன்னிட்டு கலைஞர்கள் எழுத்தாளர்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கவிதை, சிறுகதை, சித்திரப்போட்டி, குருநாடகப்போட்டி, நடனப் போட்டி என்பவற்றிற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் மேமாதம் 5ந் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

☞ சிவசிறீ முருகுப்பிள்ளை கடவுள் சுவாமிகளின் (மௌனகுரு) நூறாவது ஜெயந்தி விழா செல்வச்சந்நிதி ஆலய முன்றலில் 28- 04- 2005 வியாழக்கிழமை மிகவும் சிறப்பான முறையில் சுவாமி அவர்களின் அன்பர்கள் அடியார்களால் கொண்டாடப்பட்டது. நிகழ்வில் சந்நிதிவேற் பெருமானுக்கு விசேட அன்னாபிஷேகம், பஜனை, சொற்பொழிவுகள் நடைபெற்றன.

☞ வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலய தீர்த்தோற்சவம் 24-04-2005 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றதோடு அன்றைய தினம் நடைபெறும் இந்திரவிழாவும் மிகப்பிரமாண்டமான வகையில் நடைபெற்றது.


ஆச்சிரமப் பணிகளுக்கு உதவிபுரிய விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**செ. மோகனதாஸ்**
**சந்நிதியான் ஆச்சிரமம்**
க. இ. P.7481
***இலங்கை வங்கி***
***பருத்தித்துறை***
**தொலைபேசி இலக்கம் 021- 2263406**

உ

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



2004 ஆம் ஆண்டு மாசி மாதத்தின் நடுப்பகுதியில் ஒருநாள் காலை 10.30 மணிக்கு அம்மையார் அவர்கள் சந்நிதி ஆலயத்தின் கிழக்கு வீதியில் அமைந்துள்ள தனது வீட்டில் அன்றாட அலுவல்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சின்னக்குட்டி ஐயா அவர்களின் மகன் அகிலேஸ் அங்கே வந்து சேர்ந்தான். அப்பொழுது அகிலேசுக்கு வயது பத்து. யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலத்தில் தரம் 5 இல் கல்வி கற்றுக் கொண்டிருந்தான். தனது வீட்டிற்கு வந்த அகிலேசிடம் அம்மையார் அவர்கள் மிகவும் அன்பான முறையில் உரையாடியவாறு

தனது அலுவல்களையும் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

அவ்வாறு உரையாடிக் கொண்டிருந்த அம்மையார் அவர்கள் அகிலேசிடம் இன்று பள்ளிக்கூடம் அல்லவா ஏன் தம்பி பாடசாலைக்கு செல்லவில்லை என்று கேட்டார்கள். அம்மையார் வீட்டில் இருந்து சந்தோஷமாக விளையாடி பொழுதைப் போக்குவதற்காக வந்த அகிலேசிற்கு இது சிறிது சங்கடமாக இருந்தது. ஆனாலும் இவ்வாறான கேள்வியை ஓரளவிற்கு அவன் முன்பே எதிர் பார்த்திருக்க வேண்டும் என்பதை அவனது முகபாவனையும் பதிலும் எடுத்துக் காட்டியது. "அப்பாதான் என்னை போகவேண்டாமென்று மறித்தவர்" என்று மிகவும் இயல்பான முறையில் தனது பதிலை வெளிப் படுத்தினான். இது அப்பட்டமான பொய் என்பதை அம்மையார் அவர்கள் புரிந்து கொண்டார்கள். ஆனால் அவனது மனதை புண்படுத்த விரும்ப வில்லை. அதேநேரம் அவனை நல்வழிப்படுத்த வேண்டுமென்றும் முடிவு செய்தார்கள்.

அம்மையார் அவர்கள் அகிலேசிடம் நீ பொய் சொன்னால் அது முருகப்பாவுக்கு தெரியும். முருகப்பா உன்னைக் கோபிப்பார். அது மட்டுமல்ல பொய் சொல்வதற்குரிய தண்டனையையும் அவர் வழங்குவார் என்று எடுத்துக் கூறினார்கள்.

ஆனால் சின்னக்குட்டி ஐயாவின் மகன் அகிலேஸ் தான் சின்னப்பிள்ளை அதனால்தான் அக்கா தன்னை வெருட்டுகின்றார் என்று தனக்குள் முடிவுசெய்து கொண்டான். அதுமட்டுமல்ல அதனை வெளிப்படையாகவே அக்காவிடம் கேட்டு விடுவதற்கும் முடிவுசெய்து விட்டான். "பொய் சொன்னால் அல்லது பிழை செய்தால் சின்னப் பிள்ளைகளுக்குத்தான் முருகப்பா தண்டனை தருவாரா?" என்று தனது மனதுக்குள் தோன்றிய உணர்வலைகளை அப்படியே அக்காவிடம் வெளிப்படுத்தினான்.

உண்மையில் இவ்வாறான ஒரு கேள்வி அகிலேசிடம் இருந்து வந்தது அக்கா அவர்களுக்கு சற்று வியப்பாகத்தான் இருந்தது. ஆனால் அக்கா அவர்கள் நிலைகுலையவில்லை.

சமூகத்தில் அநீதியும், அதர்மமும் முனைப்புப் பெற்று விளங்குகின்ற இக்கால கட்டத்தில்கூட நல்லதையே நினைத்து நல்லதையே செய்ய வேண்டுமென்று சிந்திக்கின்ற அம்மையார் அவர்கள் மாணவன் அகிலேசினது இந்தக் கேள்வியால் நிலை தடுமாறிப் போகவில்லை. மாறாக வஞ்சகம் இல்லாத, அதேநேரம் துணிச்சலான ஒரு பிஞ்சு உள்ளத்தில் சரியான ஒரு விதையை அதாவது உண்மை பேசுதல், அறநெறியில் வாழப்பழகுதல் ஆகிய அம்சங்களை சந்நிதியானுடைய பெயராலே விதைத்துவிடுவதற்கான ஒரு சந்தர்ப்பமாகவே இதனைக் கருதிக் கொண்டார்கள்.

மேலும் செய்யக் கூடாத பிழைகளை சந்நிதிச்சூழலிலே செய்தவர்களையும் அதன் காரணமாக அவர்கள்

அனுபவித்த கஷ்டங்கள், எதிர் நோக்கிய பிரச்சினைகளையும் நன்கு தெரிந்து வைத்திருந்த அம்மையார் அவர்கள் அகிலேசினது உள்ளத்திலே சரியான அந்தவிதையை விதைப்பதற்கு எந்தவித தயக்கமும் அடையவில்லை. அதுமட்டுமல்ல அவ்வாறு செயற்படுவது தமது கடமை எனவும் முடிவுசெய்தார்கள்.

இவ்வாறு தனது மனதிற்குள் சிந்தனைத் தெளிவுபெற்ற அம்மையார் அவர்கள் அகிலேசை நோக்கி ஆம் பெரியவர்கள் பிழை செய்தாலும் தண்டனை நிச்சயமாக அவர்களுக்கும் கிடைத்தே தீரும் என பதில் கூறினார்கள். அத்துடன் அவன் சிறு பிள்ளையாக இருப்பதனால் அவன் விளங்கிக் கொள்ளகூடிய வகையில் தனது பதிலை விளக்கிக் கூறினார்கள். ஒவ்வொருவரும் செய்கின்ற பிழைகள் அல்லது கூறுகின்ற பொய்களுக்கு ஏற்றமாதிரி எல்லோருக்கும் முருகப்பா தண்டனைகளையும் வழங்குவார். உங்கள் அப்பா பொய் சொன்னால் அவருக்கும் தண்டனை கிடைக்கும். உதாரணமாக போகும் வழியில் முள்ளு குத்தலாம், தடக்கி விழலாம் அல்லது விபத்து ஏற்பட்டு இரத்தம் வரலாம். இவ்வாறான தண்டனைகளை எல்லாம் முருகப்பா நிச்சயம் வழங்குவார் என எடுத்துக் கூறினார்கள்.

மேலும் அம்மையார் அவர்கள் சிறுவன் அகிலேசைப் பார்த்து நீயும் முருகப்பாவின் பிள்ளைதானே. உனது அப்பாதான் பாடசாலைக்கு போக வேண்டாமென்று உன்னை மறித்தது என்று நீ எனக்குப் பொய் சொன்னால் முருகப்பாவுக்கு அது தெரியும். ஆகவே அவர் அதற்கேற்ற தண்டனையை உனக்குத் தருவார் எனக் கூறிக்கொண்டிருக்கும் பொழுது கேற்றுக்கு வெளியிலிருந்து அகிலேசின் தந்தை குட்டிஐயா "தம்பி" என்று கூப்பிடும் சத்தம் கேட்டது.

அந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறு சின்னக்குட்டி ஐயா அவர்கள் அகிலேசைஅழைப்பார் என்பதை இருவரும் சிறிதும் எதிர் பார்க்கவில்லை. என்ன செய்வது என்று தெரியாது இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஆனாலும் வருகின்றோம் என்று குரல் கொடுத்தபடி இருவரும் சிறிது தயக்கத்துடன் சென்று வெளிக் கதவைத் திறந்தார்கள். என்ன ஆச்சரியம் சின்னக்குட்டி ஐயாவையோ அல்லது வேறு எவரையுமோ அங்கே இவர்களால் பார்க்கமுடியவில்லை.

சிறுவன் தன்னை "தம்பி" எனக் குரல் கொடுத்த தனது தந்தையை அங்கே காணமுடியாத நிலையில் குழப்பமடைந்து போனான். இதே குழப்பம் அம்மையார் அவர்களுக்கும் ஏற்பட்டது உண்மையே. ஆனால் குட்டிஐயா அங்கே எந்த இடத்திலும் இல்லை என்பதை நிதானமாக அம்மையார் உறுதிப் படுத்திய பொழுது அவருக்கு விளங்கி விட்டது. இது நிச்சயமாக சந்நிதியானுடைய திருவிளையாடல் தான் என்பது. இயல்பாகவே இது போன்ற

அதிசயங்களை அடிக்கடி எதிர் நோக்குகின்ற அம்மையார் அவர்கள் ஒரு சிறுவனது உள்ளத்தில் அறத்தையும் உண்மையையும் பதிய வைக்கின்ற இந்த செயற்பாட்டிற்கும் சந்நிதியானுடைய இந்த அற்புதம் இங்கே நடந்து முடிந்திருக்கிறது என்பதை நன்கு உணர்ந்து கொண்டார்கள்.

ஆம் சிறுவன் அகிலேசிற்கு இப்பொழுது எங்கிருந்தோ ஒரு தெளிவு ஏற்பட்டது. முருகப் பெருமானுக்கு பொய் சொல்ல முடியாது முருகப்பாவுடன் உண்மை யாகத் தான் நடந்துகொள்ள வேண்டு மென்று உணர்ந்து கொண்டான். அத்துடன் பாடசாலைக்கு தானே கள்ளம் போட்ட உண்மையை அம்மையாரிடம் ஏற்றுக்கொண்டு தான் இனிமேல் அவ்வாறு செய்யாது பாடசாலைக்கு ஒழுங்காகப் போவ தாகக் கூறிக்கொண்டான். அவன் குறிப்பிட்டது போல தற்பொழுது பாடசாலைக்கு விருப்பத்துடன் ஒழுங்காகவும் போவதைப்பார்த்து அம்மையார் மட்டுமல்ல அவனது பெற்றோரும் அகமகிழ்கின்றனர்.

குழந்தைகள் இறை நம்பிக் கையின் அடிப்படையில் உண்மை யைப் பேசக் கற்றுக் கொள்வதும் அறக்கருத்துக்களுக்கு இணங்க ஒழுகப்பழகுவது என்பதெல்லாம் சாதாரண விடயங்களல்ல. அது அக்குழந்தைகளது வாழ்க்கைப் பயணத்தில் எதிர் நோக்குகின்ற பிரச்சனைகளை துணிவுடன் எதிர் கொண்டு வெற்றி காணுவதற்கும், அப்பிள்ளைகள் சிறந்த ஆளுமை வளர்ச்சியைப் பெற்றுக்கொள்வதற்கும் மிகவும் துணை செய்யும் என்பதை ஆன்மீக வாதிகள் மட்டுமன்றி உளவியல் அறிஞர்களும் ஏற்றுக் கொள்ளுகின்றனர். அத்துடன் கல்வியில் எவ்வளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டாலும் இவ்வாறான அறமும் ஒழுக்கமும் நிறைந்த நல்விழுமியக் கருத்துக்களை மாணவர் சமுதாயத் தில் ஏற்படுத்துவதே இன்றுள்ள மிக முக்கிய தேவை என்பதை கல்வி யியலாளர்களும் ஏற்றுக்கொண்டுள் ளனர்.

இவ்வாறான ஒரு செயற் பாட்டை ஒரு சிறுவனுக்கு அதுவும் மருதர் கதிர்காமர் பரம்பரையில் வந்து சந்நிதியானுக்கு தொண்டு செய்யப் போகின்ற ஒரு பிள்ளைக்கு ஏற்படுத்தியது மட்டுமல்ல. அந்த முயற்சி சந்நிதியானுடைய திருவிளை யாடலின் உதவியுடன் நிறை வேறியதை எண்ணி அம்மையார் அவர்கள் நிறைவான திருப்தியுடன் காணப்படுகின்றார்கள்.

அது மட்டுமல்ல சந்நி தியானின் அனுக்கிரகத்தைப் பெற்ற தனால் போலும் தற்பொழுது அகிலேஸ் என்ற அந்தச் சிறுவன் சந்நிதியானுக்கு திருத்தொண்டுகள் செய்து கொண்டிருப்பதையும் எம்மால் பார்க்கக் கூடியதாகவுள்ளது.

ஓம் முருகா!

---

▶▶ நன்கு அறிந்து கொள்வதே நம்பிக்கையிலும் சிறந்தது. ◀◀

உ

# வைகாசிமாத வாராந்த நிகழ்வுகள்

06-05-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

**சொற்பொழிவு:-** "ஈசனோடாயினும் ஆசை அறுமின்"

வழங்குபவர்:- *சைவப்புலவர் க. நித்தியதசீதரன்*

---

13-05-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

## பாடசாலை மாணவர்கள் நிகழ்வு

(பெரியபுலம் மகாவித்தியாலயம்)

---

20-05-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

**சொற்பொழிவு:-** பெரியபுராணம் (தொடர்)

வழங்குபவர்:- *சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல்*

*(யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)*

---

27-05-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

## ஞானச்சுடர் மாத வெளியீடு

## வைகாசி-2005

வெளியீட்டுரை :- ச. வைத்தியநாதக்குருக்கள்

*(பிரதமகுரு கந்தவனம்)*

மதிப்புரை :- ப. சிவானந்தசர்மா

*(கோப்பாய் சிவம்)*

# எதிர்காலம் இன்புற்றிருக்க எம்பெருமான் நல்லருள் நல்குவாராக

ஜனவரி
01.01.2005 மார்கழி 17 புதன்
மங்கள புத்தாண்டுஆரம்பம்.
14.01.2005 தை 1 வெள்ளி
தைப்பொங்கல்.
19.01.2005 தை 12 புதன்
கார்த்திகை விரதம்.
விசேட உற்சவம்.
25.01.2005 தை 12 செவ்வாய்
தைப்பூசம் பகல் விசேட உற்சவம்.

பெப்ரவரி
16.02.2005 மாசி 4 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
24.02.2005 மாசி 12 வியாழன்
மாசி மகம்.

மார்ச்
08.03.2005 மாசி 24 செவ்வாய்
மகா சிவராத்திரி இரவு
விசேட உற்சவம்
15.03.2005 பங்குனி 2 செவ்வாய்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
25.03.2005 பங்குனி 12 வெள்ளி
பங்குனி உத்தரம், வைரவப் பெருமான்
கும்பாபிஷேக தினம்.

ஏப்ரல்
03.04.2005 பங்குனி 21 ஞாயிறு
வருடாந்த சகஸ்ர மகா சங்காபிஷேகம்
காலை 8.00 மணி சங்குப்பூசை
பகல் 10.00 மணி சங்காபிஷேகம்
பகல் 11.00 மணி சண்முகார்ச்சனை
பகல் 12.00 மணி விஷேட உற்சவம்.
10.04.2005 பங்குனி 28 ஞாயிறு
ஆலய கும்பாபிஷேக தினம்.
11.04.2005 பங்குனி 29 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
14.04.2005 சித்திரை 01 வியாழன்
மங்கள இந்துப் புதுவருடம் (பார்த்திப)
மாலை விஷேட உற்சவம்.
24.04.2005 சித்திரை 11 ஞாயிறு
சித்திரா பூரணை விரதம்.

மே
09.05.2005 சித்திரை 26 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
23.05.2005 வைகாசி 4 திங்கள்
வைகாசி விசாகம், விஷேட உற்சவம்.

ஜூன்
05.06.2005 வைகாசி 22 ஞாயிறு
கார்த்திகை விரதம், விஷேட உற்சவம்.
13.06.2005 வைகாசி 31 திங்கள்
தீர்த்தமெடுப்பு
20.06.2005 ஆனி 6 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்.

ஜூலை
02.07.2005 ஆனி 18 சனி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
06.07.2005 ஆனி 28 புதன்
கதிர்காமம் கொடி.

10.07.2005 ஆனி 26 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பன் பூசை.
13.07.2005 ஆனி 29 புதன்
ஆனி உத்தரம் பகல் விஷேட உற்சவம்.
22.07.2005 ஆடி 6 வெள்ளி
கதிர்காம தீர்த்தம்.
இரவு விஷேட உற்சவம்.
30.07.2005 ஆடி 14 சனி
கார்த்திகை விரதம் விஷேடஉற்சவம்.

ஆகஸ்ட்
04.08 2005 ஆடி 19 வியாழன்
ஆடியமாவாசை
05.08.2005 ஆடி 20 வெள்ளி
ஆலய மகோற்சவம் ஆரம்பம்
காலை 9.15 கொடியேற்றம்.
08.08.2005 ஆடி 22 திங்கள்
பகல் உற்சவம் ஆரம்பம்.
13.08.2005 ஆடி 25 சனி
பூங்காவனம்
14.08.2005 ஆடி 26 ஞாயிறு
கைலாயவாகனம்
17.08.2005 ஆவணி 1 புதன் சப்பறம்
18.08.2005 ஆவணி 2 வியாழன் தேர்
19.08.2005 ஆவணி 3 வெள்ளி
காலை தீர்த்தம், மாலை
மௌனத்திருவிழா.
26.08.2005 ஆவணி 10 வெள்ளி
கார்த்திகை விரதம்
விஷேடஉற்சவம்

செப்ரெம்பர்
22.09.2005 புரட்டாதி 6 வியாழன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்

ஒக்ரோபர்
04.10.2005 புரட்டாதி 18 செவ்வாய்
நவராத்திரி விரத ஆரம்பம்
11.10.2005 புரட்டாதி 25 செவ்வாய்
சரஸ்வதி பூசை
12.10.2005 புரட்டாதி 26 புதன்
விஜயதசமி
19.10.2005 ஐப்பசி 2 புதன்
கார்த்திகை விரதம்
விசேடஉற்சவம்

நவம்பர்
01.11.2005 ஐப்பசி 15 செவ்வாய்
தீபாவளி
02.11.2005 ஐப்பசி 16 புதன்
கந்தசஷ்டி விரதஆரம்பம்
07.11.2005 ஐப்பசி 21 திங்கள்
கந்தசஷ்டி விரதம்
மாலை சூரசம்ஹாரம்
08.11.2005 ஐப்பசி 22 செவ்வாய்
தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்.

16.11.2005 கார்த்திகை 1 புதன்
திருக்கார்த்திகை விரதம்
குமாராலய தீபம்
விசேடஉற்சவம்

டிசம்பர்
06.12.2005 கார்த்திகை 21 செவ்வாய்
விநாயகர் சஷ்டிவிரதம்
08.12.2005 கார்த்திகை 23 வியாழன்
திருவெம்பாவை பூஜாரம்பம்
11.12.2005 கார்த்திகை 26 ஞாயிறு
ஆண்டியப்பர் பூசை
13.12.2005 கார்த்திகை 28 புதன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
17.12.2005 மார்கழி 2 சனி
திருவாதிரை உற்சவம்

சுபமங்களம்

பதிவு இலக்கம்: Q.D./30/NEWS/2005